Koviloor Digital Library

சிவகாமியின் செல்வன்



ACC.No: 43222
Q1

படைப்பும், பரிணாமமும்

Koviloor Digital Library

வாழ்த்துரை

சோ. பாலசுப்ரமணியன், M.A., M.Ed.,
தலைமையாசிரியர்
சபாநாயக முதலியார் இந்து தொடக்கப்பள்ளி,
மேல இரதவீதி, சீர்காழி - 609 110.

படைப்பும் பரிணாமமும் என்ற இந்த நூல் தெளிவான சிந்தனையைத் தூண்டும் நூலாகும். சடப்பொருளிலிருந்து உயிர்கள் தோன்றின என்ற கருத்தை, அறிவார்ந்த ஆராய்ச்சியின் மூலம் மறுத்துள்ள நூலாசிரியர் சைவ சித்தாந்தத்தில் மூழ்கி முத்தெடுத்தாற் போல படைப்பாற்றலை விளக்கியுள்ளார். அவ் அரிய புத்தகம் அறிவியல் வளர்ச்சியினால் மாறிவரும் உலகில், நமது படைப்பியலின் தத்துவத்தை விளக்கி அதன்மூலம் சமுதாயத்திற்கு நல்லதொரு வழிகாட்டியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இச்சிறிய நூல் அறிவியல் அறிஞர்கள், கல்வியாளர்கள், தத்துவவாதிகள், சமயவாதிகள் ஆகிய அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய செய்திகளை உள்ளடக்கியது மட்டுமன்றி வருங்கால சந்ததியினருக்கும் இளைஞர்களுக்கும் காலப் பெட்டகமாகவும், விளங்கக் கூடியதாகும். ஆங்கில மொழியில் உயர் பட்டம் பெற்ற நூலாசிரியர் சைவசித்தாந்தத்திலும் தமிழ்மொழியிலும் மாறாப் பற்றுகொண்டு இருபத்தி ஐந்துக்கும் மேற்பட்ட புத்தகங்களை வெளியிட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவரின் சமயப் பற்றும், ஆன்மீக சிந்தனையை அறிவியலோடு ஒப்பிடும் ஆற்றலும், வியக்கத் தக்கதாகும்.

சிவ சிவ பத்திரிகையில் தொடர் கட்டுரையாக எழுதி வந்த நூலாசிரியர் பல்வேறு தரப்பினரின் வேண்டுகோளினை ஏற்று புத்தகமாக வெளிட்டதற்கு நூலாசிரியரும் எனது அன்புச் சகோதரருமான சிவகாமியின் செல்வன் டாக்டர். தி.பாலசுப்ரமணியன் அவர்களுக்கு அனைவரின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு இவரது பணி மேலும் தொடர வாழ்த்தி எல்லாம் வல்ல இறைவனை வணங்கி வேண்டுகிறேன்.

காலம்: 01.07.04
இடம்: சீர்காழி.

சோ. பாலசுப்ரமணியன்

Koviloor Digital Library

85-2

படைப்பும், பரிணாமமும்

ஆக்கியோன்

சிவகாமியின் செல்வன்

பதிப்பாசிரியர்:

டாக்டர்.சிவ. திருச்சிற்றம்பலம்

பதிப்பாளர்:

தி.திருநாவுக்கரசு, M.S.,

ஆசிரியர் "**சிவ சிவ.**"

மேலச்சாலைத் தெரு,

சுந்தரபெருமாள்கோயில் - 614 208.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR

A. No. 43222

வெளியீடு:

திருமுறை சித்தாந்த ஆய்வுமையம்

சூரியனார்கோயில், தஞ்சை மாவட்டம்

'Koviloor Digital Library

படைப்பும், பரிணாமமும்
- சிவகாமியின் செல்வன்
டாக்டர். T. பாலசுப்ரமணியன்

பதிப்பாசிரியர் : டாக்டர்.சிவ. திருச்சிற்றம்பலம்

பதிப்பாளர் : தி.திருநாவுக்கரசு, M.S., ஆசிரியர் "சிவ சிவ"

உரிமை : தி.திருநாவுக்கரசு, M.S., ஆசிரியர் "சிவ சிவ"
மேலச்சாலைத் தெரு,
சுந்தரபெருமாள்கோயில் - 614 208.

பக்கங்கள் :

முதற்பதிப்பு : ஜூலை 2004

விலை : ரூ.15

நூலளவு : 14 X 22 (டெம்மி)

தாள் : 13.7 கி.கி.

ஓவியம் : நறுமுகை

வெளியீடு : திருமுறை சித்தாந்த ஆய்வுமையம்
சூரியனார்கோயில், தஞ்சை மாவட்டம்

அச்சகம் : நறுமுகை ஒளி அச்சகம், சீர்காழி.

Koviloor Digital Library

85-2

முனைவர். சிவ. திருச்சிற்றம்பலம்
தமிழ்ப்பேராசிரியர்
அரசு தன்னாட்சிக் கல்லூரி
கும்பகோணம் - 612 001.
இயக்குனர் (Hon) திருமுறைசித்தாந்த ஆய்வு மையம்,
சூரியனார்கோயில் ஆதீனம்.

பதிப்புரை

இன்றைய மெய்ஞ்ஞான வளர்ச்சிக்குத் தடைகளை ஏற்படுத்த எண்ணும் சில அதிமேதாவிகள் அவை விஞ்ஞான யுகத்திற்குச் சிறிதும் ஒவ்வாத பத்தாம் பசலித்தனமானவை என்று கூறிவருவதன் வாயிலாகத் தங்களை அறியாமலேயே, தங்கள் அறியாமையை வெளிப்படுத்தி வருகின்றனர் என்பதே உண்மை நிலையாகும்.

சைவ சமய சித்தாந்தக் கொள்கைகள் அனைத்தும், இன்றைய அறிவியலாளர்கள் பல்வேறு ஆய்வக உபகரணங்களைக் கொண்டு அரிதின் முயன்று ஆராய்ந்து வெளிப்படுத்தி வரும் ஆய்வியல் உண்மைகளை, தொன்மைக் காலத்திலேயே எவ்வகையான புறக்கருவிகளின் துணையும் இன்றித் தம் அகவுணர்வுப் பொறிகளால் உணர்ந்து ஞானிகள் வெளிப்படுத்தியருளிய பேராய்வுக் கருத்துகளாகும். அவை அன்றும் இன்றும் என்றும் மாறாத கொள்கைகளாகும்.

சான்றாகப் பஞ்சபூதங்கள் எனப்பெறும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என பலவற்றின் வடிவம், வண்ணம், தன்மை பற்றிய சைவ சித்தாந்தக் கருத்துக்கள் காலத்தை வென்று நிற்கும் பெற்றியன என்றால் அது மிகையன்று.

அது போலவே இன்றைய அறிவுலகம் வெளிப்படுத்தி வரும் படைப்பியல் பரிணாமக் கொள்கைகள், சமய உண்மைக் கொள்கை களையே. பெரிதும் ஒத்துப் பேகும் பாங்கினைப் புலப்படுத்தும் பெற்றியில், இந்நூலாசிரியர் சிவகாமியின் செல்வன் டாக்டர்.தி.பாலசுப்பிரமணியன் அவர்கள் இந்நூலை அறிவியல் சார்ந்த சமயத் தத்துவ நூலாக வெளியிட்டுள்ளமை பெரிதும் பாராட்டி வரவேற்கத் தக்கதாகும்.

சமயவாணர்கள் புராணப் பிரசங்கிகளாக மட்டும் அமையாமல், அறிவியல் ஆற்றலும் பொருந்தம் பெற்றிருப்பின் இன்றைய அரைவேக்காடுகள் விடுக்கும் சவால்களுக்கு எளிதில் விடையிறுக்க இயலும் என்னும் உண்மையினைச் சுட்டிக் காட்டும் வகையில் இவ்வரிய நூலைப் படைத்தளித்துள்ள ஆசிரியர்தம் நுண்மான் நுழைபுலத் திறம் வியந்து போற்றவல்லதாகும்.

இடம்: குடந்தை
தேதி: 1.7.2004

நூல் ஆசிரியர் பணி சிறக்க வாழ்த்தும்.
அன்பன் சிவ. திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

ஆசிரியர் உரை

தாகம் எடுக்கும்பொழுது மனிதன் தண்ணீரைத் தேடுகிறான். பசி எடுக்கும் பொழுது உணவினைத் தேடுகிறான். களைப்படையும் பொழுது ஓய்விற்கு நிழலைத் தேடுகிறான். இவை கிடைத்த பின்னர் இன்பத்தைத் தேடுகிறான். இவை யாவும் கிடைக்கவில்லை என்றலோ அல்லது கிடைத்தும் அனுபவிக்க இயலவில்லை என்றலோ அவன் துன்பப் படுகிறான். உடனே துன்பத்திற்குக் காரணத்தைத் தேடுகிறான் துன்பத்திற்குக் காரணம் என்னென்ன என்கின்ற இந்த ஆய்வின் கூறுகளுள் ஒன்று தான் உயிர்களின் மூலமும், உலகத்தின் தோற்றமும் இயற்கையாலானதா? இல்லை இறைவனலானதா? என்ற வினா?!. வழக்கம் போல் இதிலும் இரு கூறுகள்! ஒன்று படைப்பா? என்கின்ற அடிப்படையில்; மற்றொன்று பரிணாமமா? என்கின்ற அடிப்படையில்.

தோற்றமெல்லாம் இயற்கையால் என்றால் முதல் தோற்றம் யாரால்? எப்பொழுது? எப்படி? ஏன்? எதற்காக? ஆக்கமெல்லாம் ஆண்டவனால் தான் என்றால் அவன் யார்? அவன் செயல் பாடுகளுக்கு உரிய காரணம் என்ன ? நமக்கும் அவனுக்கும் உள்ள தொடர்புதான் என்ன? நாம் வாழ விழித்துக் கொண்டே வழி வகுத்துக் கொண்டிருக்கும் இப்பிரபஞ்ச இயக்கம் யாருடைய கட்டுப்பாட்டில்? அப்படியாயின் அவர் யாருடைய கட்டுப்பாட்டில்? ஏன் அவரைக் காண இயலவில்லை?

நம்முடைய வாழ்வினை நிச்சயிப்பதும் நிர்ணயிப்பதும் யார்? அனைத்திலும் நிலை இல்லாத தன்மை உண்டு என்பதனை நன்றாகவே உணர்ந்த மனிதன், தான் மட்டும் நிலை பேறு கொண்டவன் என்ற எண்ணத்தில் செயல்படக் காரணம் என்ன? அழியும் மனிதன் தோன்றுவதற்கு முன்னர் இருந்த நிலை என்ன? அழிந்த பின்னர் அவனின் நிலை என்ன? அவனில் ஏதாகிலும் உண்டா? இல்லை ஒன்றுமில்லையா? சிலர் எல்லாமும் பெற்று மகிழ, பலர் எதுவுமே பெறாமல் துன்பத்தில் உழல; ஏன் இந்த விரும்பத்தகாத வேறுபாடு? எளியோருக்கும் வாய்ப்பளித்து வாழ்வளிக்கத்தானே இந்த சமூக, சட்ட, திட்ட, சீர்திருத்த அமைப்புக்கள் எல்லாம். அதையும் மீறி வல்லவன் வாழ்வு பெறுவதும், நல்லவன் துன்புறுவதும், துன்புறுத்தபடுவதும் ஏன்? எதற்காக?

இவற்றிற்கெல்லாம் உரிய விடைகளை ஆளாளுக்கு ஒன்று சொல்லிக் கொண்டி இருக்கின்றார்கள். ஒருநோய்க்குக் காரணம் கிரகங்களின் அமைவே என்று சோதிடன் சொன்னால், தொற்றுநோய்க்

85-2

கிருமிகள் தான் காரணம் என்கிறான் மருத்துவன்; வினைப்பயன் தான் என்கிறான் ஞானி; விதி என்கிறான் அஞ்ஞானி; பில்லி, சூனியம், ஏவல் வைப்பு காரணம் என்கிறான் மந்திரவாதி; பரிகாரம் செய்யலாம் என்கிறான் ஒரு பக்தன்; உனது வினை; அதாவது பூர்வ ஜென்ம பாவங்கள் என்கிறான் ஒரு சமயவாதி; தேவசித்தம் என்கிறான் இன்னுமொரு சமயவாதி; எல்லாம் திருவருள் என்கிறான் இன்னுமொரு மெய்ஞ்ஞானி;. சமூகக் கொடுமை என்கிறான் சீர்திருத்தவாதி; அரசியல் அட்டூழியங்கள் என்கிறான் கட்சிக்காரன்; யாகம் செய்தால் தீரும் என்கிறான் புரோகிதன்; காரணங்கள் இப்படிப் பலவாறாகப் பலரால் சொல்லப்பட்டாலும் எது உண்மை என்பதனை அறிந்து கொள்ளும் ஆர்வம் ஏனோ குறைவதே இல்லை நம்மிடம். ஒவ்வொருவருக்கும், தன்னுடைய தேவைக்காகவும், தன்னுடைய நலத்திற்காகவும், சுகத்திற்காகவும், தனது மன மகிழ்ச்சிக்காகவும், உட்கார்ந்து யோசிக்கின்றார்கள்; ஓயாது உழைக்கின்றார்கள்; ஓடி ஓடி எதையோ தேடுகின்றார்கள். அனுபவங்களும், ஆத்ம சிந்தனைகளும் அமானுஷ்ய சக்தியை அடையாளம் காட்டுகின்றன; மனித சிந்தனை பரத்துவத்தை நோக்கிச் சிந்தித்து சிறகடிக்கின்றன., உலகம் தோன்றி மனிதன் சிந்திக்கத் துவங்கிய காலம் முதல், உலகமும், மனித சிந்தனையும் அழியும் வரை, Super Nature என்கின்ற இறைவனைப் பற்றியும், இயற்கையைப்பற்றியும், உயிர்களைப்பற்றியும், உடலைப்பற்றியும், சாதாரண நிகழ்வுகளைப் பற்றியும், அசாதாரண நிகழ்வுகளைப்பற்றியும், அற்புதங்களைப் பற்றியும் தொடர்ந்து ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. அதன் தொடர்பான செய்திகளும், அதற்கு உரிய மறுப்புச் செய்திகளும் அவ்வப்பொழுது வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன. நினைத்தவை எல்லாம் நடக்கின்ற பொழுது கடவுளைக் காரணம் காட்டுவதும், முயற்சி எல்லாம் தோல்வியடைந்து நடைபெறாமல் போகையில் இறைவனே இல்லை என்பதும், சாதாராண மனித மனத்தின் வெளிப்பாடுகள் தான்.

நிகழ்வுகளின் காரண காரியங்கள் பல நிலைகளில் புரிவதே இல்லை. இந்தச் சூழலில் நமது அனுபவங்கள் எண்ணங்கள், பிறர் எண்ணங்கள் அனுபவங்கள். நமது முன்னோர்கள் சொல்லிய செய்திகள் ஆகியவற்றுடன் உலக நடப்புகள், ஆய்வு முடிவுகள், இவற்றை எல்லாம் ஒன்று கூட்டிக்கழித்து, பெருக்கிவகுத்து சிந்திக்கின்ற பொழுது அனைத்திற்கும் இல்லை என்றாலும்,ஒரு சிலவற்றிற்கு மறுக்க வியலா

Koviloor Digital Library

சான்றுகள், தடயங்கள் கிடைத்து விடுகின்றன. ஆட்சியில், ஆவணத்தில், காட்சியில், சாட்சிகளில் என ஏதாகிலும் ஒன்றில் தடயங்கள் கிடைக்கின்ற பொழுது, அதன் அடிப்படையில் ஆய்வுகள் மேலும் விரிவாக்கப் படுகின்றன. விஷயங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

காரியப்பாடுகள் சிலவற்றைக் கூர்ந்து கவனித்தபொழுதில் அசைக்கவியலா காரணங்கள் சில அவற்றுள் கண்டறியப்படும் பொழுது, மறுக்கவியலா சக்தியின் செயல்பாடுகள்தான் (கர்த்தா வின் செயல்) இவை என்கின்ற முடிவிற்கு வருகின்றோம். அப்படிப்பட்ட சில நிகழ்வுகளும், அது தொடர்பான சில சிந்தனைகளும் தான் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

சில அறிவியல் செய்திகளின் அடிப்படையில், சில அறிவியல் ஆய்வுகளை மறுக்கவும், சில ஆய்வறிஞர்களின் கொள்கைகளை விமர்சிக்கின்ற நிலையும் அடியேனுக்கு ஏற்பட்டது தவிர்க்கவியலாத தாகிவிட்டது. இவை தர்க்கரீதியிலான கருத்து வெளிப்பாடுகளேயன்றி, தனிப்பட்ட விருப்பு, வெறுப்பினால் ஆன முட்டல் மோதல்கள் அல்ல என்பதனை மிகவும் பணிவுடன் வாசக அன்பர்களுக்குத் தெரிவித்துக்-கொள்கிறேன்.

1999-ஆண்டு எர்ணாகுளத்திற்கு சைவ சித்தாந்தம் பேசச் சென்றிருந்தேன். ஒருவாரகாலம் A.K. கதிரேசச் செட்டியார் அவர்களின் ஞான இல்லத்தில் தங்கி இருந்தேன். அக்காலை ஒரு நாள்- 1999 நவம்பர் 18, "தி இந்து", நாளேட்டினைப் பார்த்தபொழுது ஒரு செய்தியினை மிகவும் சாதாரணமாகப்படித்துவிட்டு போட்டுவிட்டேன். சித்தாந்தாந்த சொற்பொழிவு முடிந்து ஊருக்கு திரும்பிக் கொண்டிருக்கும் பொழுது இரவு ஈரோடு தண்டவளத்தில் ரயில் நகர்ந்து கொண்டிருந்தது. உறக்கத்தில் ஒரு இடர்ப்பாடு; மனமெல்லாம் இந்து நாளேட்டில் படித்த செய்திகள்; ஆக்கிரமித்த அவை என்னை மிகவும் சிந்திக்க வைத்தன. வீடு வந்து சேர்ந்ததும் செட்டியார் ஐயாவை தொலைபேசியில் அழைத்து அந்த இந்து நாளேட்டினைத் தேடி எடுத்து அந்த பக்கத்தை அனுப்பி வைக்குமாறு வேண்டினேன். செட்டியார் அவர்களும் அதனை உடன் அனுப்பி வைத்தார்கள். உடனடியாக அதனைத் தமிழில் மொழி மாற்றம் செய்து அதன் விளக்க உரையாக, எனது எண்ணச்சிதறல்களை தனித்தனிக் கட்டுரைகளாக, சூரியனார் கோயில் ஆதீனத் திங்களிதழான "சிவ சிவ" வில் தொடர்ந்து எழுதினேன். நல்ல வரவேற்பினைப் பெற்ற அக்கட்டுரைகளின் தொகுப்பினை நூலாக வெளியிட்டால் நலன் பல

Koviloor Digital Library

கிட்டும் என்று பல அன்பர்கள் "சிவ சிவ" இதழாசிரியர் திரு.தி.திருநாவுக்கரசு அவர்களுக்கு எழுதினர். திருமுறை சைவ சித்தாந்த ஆய்வுமைய இயக்குநர் டாக்டர். சிவ. திருச்சிற்றம்பலம் அவர்களும் இக்கட்டுரைகள் நூலாக வருவது அவசியம் என்று வற்புறுத்திய நிலையில், இவையாவும் தொகுக்கப்பட்டு ஒரு நூலாக மலர்கின்றது. இதனைப் படித்து முடித்ததும் உங்கள் மனதில் தோன்றுபவை எதுவாக இருந்தாலும் தெரியப்படுத்தலாம். அவை இது தொடர்பான அடுத்த நூலுக்கு உதவிடும் என்பதில்லை ஐயமில்லை.

குறைகாணின் சுட்டி யருள்க! திருத்திக் கொள்வேன்;

நிறைகாணின் வாழ்த்தி யருள்க! ஊக்கம் பெற்று உற்சாகத்துடன் மேலும் எழுதுவேன்.

இந்நூலினை வெளிட பெரிதும் விரும்பி பதிப்புரை எழுதிய திருமுறை சித்தாந்த ஆய்வுமைய இயக்குனர் பேராசிரியர் டாக்டர்.சிவ.திருச்சிற்றம்பலம் அவர்களுக்கும்; இதனை வெளியிட ஆக்கமும் ஊக்கமும் அளித்த "சிவ சிவ" இதழாசிரியர் திரு.தி.திருநாவுக்கரசு அவர்களுக்கும்; இந்நூலினை வெளியிட பல்வகையிலும் உதவி புரிந்திட்ட அருமைத் தம்பி சோ.பாலசுப்பிரமணியன், தலைமையாசிரியர் (சாபாநாயக முதலியார் இந்து தொடக்கப்பள்ளி, மேலரதவீதி, சீர்காழி) அவர்களுக்கும்; இந்நூலினை செம்மையாக அச்சிட்டு அழகாக வடிவமைத்துக் கொடுத்த சீர்காழி நறுமுகை அச்சக உரிமையாளர் திரு.சி.விஜயன் அவர்களுக்கும், என்னுடைய நன்றி, அன்பு வணக்கம் வாழ்த்துக்கள் என்றென்றும் உரித்தாகுக.

இடம்: சிதம்பரம் — அன்பன்

காலம்: 07.07.2004 — சிவகாமியின் செல்வன்

Koviloor Digital Library

உள்ளே...

1. Origin of Life is Super Natural	1
2. மேலது தமிழாக்கம்	4
3. ஒரு செல் உயிரி எங்கிருந்து தோன்றி இருக்க முடியும்?	7
4. சூரியன்- ஒரு பார்வை	9
5. படைப்பில் தாவரங்கள்	12
6. அவ்வப்பொழுது முரண்படும் அறிவியல்	13
7. மூளையின் அளப்பரும் ஆற்றல்	14
8. நுண் உணர்வு	17
9. அண்டக்கதிர்களும் அருட்பெருங்கருணையும்	19
10. ஜீவ சிருஷ்டித் தத்துவம்	20
11. அறிவியலின் டாப் குவார்க்கும், ஆன்மீகத்தின் (சைவ சித்தாந்தத்தின்) மாயையும்	21
12. இறைவன் இயற்றிய தனு, கரண, புவன, போகங்கள்	25
13. படைப்புத் திறன்	27
14. உடன் பிறந்தது...	28
15. அணுவின் கூறுகள்	29
16. சிந்திக்கச் சில அறிவியல் உண்மைகள்	30
17. எதிர்பாராதவை	32
18. படைப்பின் அடையாளங்கள்	36

Koviloor Digital Library



Life cannot be created from non-life

DR. DUANE T. GISH

Koviloor Digital Library

Koviloor Digital Library

The Hindu of 18.11.99

"ORIGIN OF LIFE IS SUPERNATURAL"

Dr. Duane T. Gish, creation scientist from the US, has a doctorate in biochemistry. He has 18 years experience in biochemical and biomedical research at the Berkley and Cornell Universities in the US, A proponent of the Creation theory, he has authored several books and articles, presenting scientific evidence in .favour of Creation. Dr. Gish, who is listed in the American Men of Science, is currently the senior vice-presiden t of the institute of creation Research, California. He talks to C.Maya.

Dr. Duane T. Gish

The Theory of Evolution and the controversial of the institute of creation Research "Theory of Creation which are contradictory have always drawn the attention of the scientific community. Did the universe create by itself? Did life originate through evolution?

"The scientific studies undertaken by Creation scientists have proved that the universe could not have created by itself naturally. Life cannot be created from non-life. Origin of life has to be theistic and supernatural", says Dr. Gish.

Dr.Gish said that there was adequate scientific evidence to support his contention as opposed to the Evolution theory.

According to the Evolution theory, the universe was created with a 'big bang', with the sudden explosion of a cosmic egg, which created two gases, hydrogen and helium. From these gases, stars, galaxies and the solar system created itself and a microscopic single-celled organism, through millions of random DNA accidents, evolved into everything

that has ever lived.

"It is against natural laws that simple gases, through a naturalistic process, transformed itself into the universe. The second law of Thermodynamics states that any system in isolation will always deteriorate, decay and goes from the complex to the simple".

"But the Evolutionists believe that the universe was an isolated system, which came from chaos and disorder and became the orderly existence of the day; that you and I evolved from hydrogen gas. This is utterly unscientific and irrational", Dr. Gish said.

"We creation scientists believe that something supernatural exists that created the universe. From where oxygen, ozone, palnts, photosynthesis come, Evolutionists have no answer", he said, If a single-cell organism evolved into all the creatures in universe, scientists would have been able to find millions of fossils in transitional forms. But no such fossils have ever been found. The fossils of fish, believed to be the first vertebrate, and monkeys, all seem fully formed, with no ancestors or transitional forms linking one to another. Hence life could not have evolved, it had to be created supernaturally.

Dr. Gish said that though Evolutionists have no answer to these evidences their theory still reigned supreme in the scientific and academic communities.

He said majority of the scientists in the US are Evolutionists. Among people, 50 per cent believe that God created universe and another 40 per cent that God used evolution to create universe. Schools and universities continue to teach the Evolution theory, without leaving any room for doubt. "But today, the Creation movement is gaining

Koviloor Digital Library

momentum all over the world. There are several national Creation organisations and thousands of Creation scientists in the US and in other parts of the world. Some schools, though they still each the Evolution theory, now do not emphasise it.

Dr. Gish contends that' supernatural 'does not naturally translate into religion. The Bible as well as all Eastern religions support the theory of creation and if one believes that a creator existed, it could be related to any religion. " One's belief that there was no creator could be as religious as another's belief in a creator", he countered.

"We have not been able to get our theory into any textbooks so far. But we feel that both the theories - Evolution and Creation - should be placed before the students and that they should be allowed to decide for themselves", Dr. Gish said.

Koviloor Digital Library

தமிழாக்கம்

(DR.DUANE T. GISH)

டாக்டர் டியூனே டி.கிஷ் அமெரிக்கப் படைப்பியல் விஞ்ஞானி (Creation Scientist) ஆவார். இவர் உயிர்ம வேதியியலில் (Bio-Chemistry) ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற்றவர். இவர் தொடர்ந்து 18 ஆண்டுகளாக உயிர்ம வேதியியலிலும், உயிர்ம மருந்தியலிலும் (Bio Medical) அமெரிக்க பர்க்லி (Berkley) மற்றும் கார்னல் (Cornell) பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி செய்து வருகின்றார். படைப்பியல் கொள்கையின் உண்மையைத் தக்க ஆதாரங்களுடன் ஆதரித்துப் பேசும் இவர், பற்பல நூல்களையும், கட்டுரைகளையும், அறிவியல் பூர்வமான ஆதாரங்களுடன் எழுதியுள்ளார். அமெரிக்க நாட்டின் மிக முக்கியமான விஞ்ஞானிகளின் முதன்மைப் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் இவர். தற்பொழுது கலிபோர்னியாவில் உள்ள படைப்பியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் முதுநிலைத் துணைத் தலைவராக (Senior Vice President) இருக்கின்றார். இவர் செய்தியாளர் சி. மாயாவுடன் சந்தித்துப் பேசிய கருத்துக்கள் கீழ்வருமாறு:

பரிணாமக் கொள்கையும், அதற்கு நேர் எதிர்மாறான படைப்பியல் கொள்கையும் ஒன்றிற்கு ஒன்று முரண்பட்ட நிலையில், எப்பொழுதும் விஞ்ஞானிகளின் கவனத்தை ஈர்த்துக் கொண்டே உள்ளன. இப்பிரபஞ்சம் தானே உருவானதா? உயிர்கள் பரிணாம வளர்ச்சியின் வாயிலாகத்தான் தோன்றினவா? !

படைப்பியல் விஞ்ஞானிகள் தாங்கள் மேற்கொண்ட ஆராய்ச்சி முடிவுகளின் மூலம் கண்டறிந்து நிரூபிக்கப்பட்ட முடிவின்படி, இப்பிரபஞ்சமானது (Universe), தானே இயற்கையில் தோன்றியது அல்ல என்ற முடிந்த முடிவுக்கு வந்துள்ளனர்.

உயிர்கள், உயிரற்றவற்றில் இருந்து படைக்கப்பட்டிருக்கவே முடியாது. உயிர்களின் தோற்றம் கடவுளாலேயே என்றும், உலக நிலைப்பாடு அவர்தம் ஆளுகையாலுமே நடைபெறுகின்றது என்றும் டாக்டர். கிஷ் மிகவும் உறுதிபடச் சொல்லுகின்றார். பரிணமாமக் கொள்கைக்கு எதிராக தமது படைப்பியல் கொள்கைக்கு ஆதரவாக, போதுமான அறிவியல் ஆதாரங்களும், நிரூபணங்களும் உள்ளன என்று கூறுகின்றார்.

பரிணாமக் கொள்கையின்படி, இப்பிரபஞ்சம் பெரு வெடிப்பால் (Big Bang Theory) தோன்றியது. பிரபஞ்ச முட்டை வெடித்துச்

Koviloor Digital Library

சிதறியவுடன், ஹைட்ரஜன், ஹீலியம் என்னும் இரண்டு வாயுக்கள் தோன்றின. இவ்விரு வாயுக்களினின்றும் அண்டங்கள் (galaxies) மற்றும் சூரியக் குடும்பம் அனைத்தும் தாமே தோன்றின. பின் அதிலிருந்து நுண்ணுயிரியான ஒரு செல் உயிரினங்கள் தோன்றின. இவ்வளர்ச்சியும் இன்றைக்கெல்லாம் இவை இருக்கின்ற நிலைக்கும் காரணம் பலலட்சக்கணக்கான டி.என்.ஏ. (ஆக்ஸி ரிபோ நியூக்ளிக் அமிலம் DNA) விபத்துக்கள் (நிகழ்வுகள்) தற்செயலாக, தன்னிஷ்டப்படி (Random) நடைபெற்றமையால் தான் என்கிறது பரிணாமக்கொள்கை.

எளிமையான வாயுக்கள் (Simple gases) இயற்கையான தனது தனித்தன்மையின் மூலம் தானே (அவைகளாகவே) ஒருக்காலும் பிரபஞ்சமாகப் பரிணமித்து மாறிவிட இயலாது. அவ்வாறு மாறி இருக்கும் என்பது இயற்கை விதிகளுக்கு (Natural laws) முற்றிலும் புறம்பானது ஆகும். வெப்ப இயங்கு சக்திகள் (Thermo Dynamics) இரண்டாம் விதி, 'எந்த ஒரு அமைவும் தனித்திருக்கையில் (isolated) குறையும் அல்லது சிதைந்துமாறி அழிவடையும்; அல்லது சிக்கலான தன்மையில் இருந்து எளிமையான நிலையை (From the complex to the simple) அடையும், என்று கூறுகிறது. ஆனால் பரிணாமக் கொள்கைவாதிகள் பிரபஞ்சம் தனிமைப்பட்டு அமைந்த ஒரு அமைப்பு எனவும், அவ்வமைப்பு ஒரு முழு குழப்பமும் ஒழுங்கின்மையும் (Chaos and confusion) ஆனதொரு நிலையில் இருந்து இன்றைக்குள்ள ஒரு ஒழுங்கான அமைவினைப் பெற்று, தற்போதுள்ளதொரு நிலைப்பாட்டிற்கு வந்துள்ளது எனவும்; நாம் கூட அந்த ஹைட்ரஜன் வாயுவினின்று பரிணமித்து வந்த உயிர்களே என்றும் நம்புகின்றனர். (that you and I evolved from hydrogen gas) இவ்வாறு சொல்லப்படுவது முற்றிலும் அறிவியலுக்கு எதிரானதும், பகுத்தறிவுக்கு முரணானதுமாகும் என்று டாக்டர் கிஷ் உறுதிபடக் கூறுகின்றார்.

படைப்பியல் விஞ்ஞானிகளான நாங்கள் கடவுள் என்கின்ற (Something Supernatural) ஒருவர் இருக்கிறார் என்றும், அவரே இப்பிரபஞ்சத்தைப் படைத்துள்ளார் எனவும் உறுதி பட நம்புகின்றோம்.

ஆக்ஸிஜன்(O_2) ஓஸோன் (O_3), தாவரங்கள், ஒளிச்சேர்க்கை முதலியவை எல்லாம் எங்கிருந்து வந்தன எனக் கேட்டால், பரிணாமக் கொள்கையாளர்களிடமிருந்து சரியான பதில் இல்லை என்று டாக்டர் கிஷ் மேலும் கூறுகின்றார்.

Koviloor Digital Library

ஒரு செல் உயிரி, தன்னுடைய பரிணாம வியல் வளர்ச்சியின்படி இப்பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து ஜீவராசிகளாக (Creatures) பரிணமித்து தோன்றி இருக்குமேயானால் விஞ்ஞானிகளால்; லட்சக்கணக்கில் படிமங்களை (Fossils), அவற்றின் பரிணாம வளர்ச்சி மாறிய அந்த அந்த நிலையிலேயும் (transitional forms) கண்டுபிடித்திருக்க இயலும். ஆனால் அத்தகைய படிமங்கள் கண்டுபிடித்திருக்கப்படவே இல்லை. மீன்களும், குரங்குகளும் முதன் முதலில் முழுமையான முதுகெலும்பு பெற்றவையாக பரிணாமவியல் வல்லுனர்களால் நம்பப்படுகின்றன. இவற்றின் படிமங்கள் மூலம், இவை முழுமையான அமைவினைப் பெற்றவையாகக் காணப்படுகின்றன. ஆனால் அவற்றின் முன்னோர்களின் படிமங்களோ அல்லது மாறிய நிலைக்கும் அதற்கு முன் இருந்த நிலைக்கும் வாழ்ந்த இடைக்கால (transitional period) உயிரிகளின் படிமங்கள் (முன்னோர்களுடைய தொடர்பினை இணைக்க கூடிய படிமங்கள்) ஒன்று கூடக் கிடைக்கவில்லை. எனவே உயிரிகள் பரிணாம வளர்ச்சியின் மூலம் தாமே தோன்றவில்லை. அவை இறைவனாலேயே படைக்கப்பட்டு இருந்திருக்க வேண்டும்.

பரிணாமக் கொள்கையாளர்கள் மேலே கூறப்பட்ட வாதங்களுக்குச் சரியான பதில்களைத் தர இயலாமல் இருந்தபோதிலும், அவர்களின் கொள்கை அறிவியல் மற்றும் கல்வியாளர்களிடையே, தற்பொழுதும் மேன்மைபட விளங்குகிறது என்றார் டாக்டர் டி.கிஷ்.

அமெரிக்காவின் பெரும்பான்மையான விஞ்ஞானிகள் பரிணாமக் கொள்கைவாதிகளே என்று டாக்டர் டி.கிஷ் கூறுகிறார். மக்களில் பாதிப்பேர் பிரபஞ்சப் படைப்பு கடவுளாலேயே என்று நம்புகின்றனர். ஏனையோர்களில் 40% இப்பிரபஞ்சப்படைப்பிற்கு கடவுள், பரிணாமக் கொள்கையைப் பயன்படுத்தினர் என்று நம்புகின்றனர். பள்ளிகளும், பல்கலைக்கழகங்களும் பரிணாமக் கொள்கையையே, எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி, கற்பித்து வருகின்றன. ஆனால் இன்று படைப்பியல் கொள்கை இயக்கம் உலக அளவில் விரைந்து பிரபலமடைந்து கொண்டு இருக்கிறது. பல தேசியப் படைப்பியல் அமைப்புக்களும், ஆயிரக்கணக்கானப் படைப்பியல் விஞ்ஞானிகளும், அமெரிக்காவிலும், உலகின் ஏனைய பாகங்களிலும் உள்ளனர்.

Koviloor Digital Library

சில கல்வி நிறுவனங்கள் பரிணாமக்கொள்கையைத் தற்பொழுது கற்பித்தப்பொழுதிலும், அதற்கு அவ்வளவு அழுத்தமான முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

டாக்டர் டி.கிஷ் இறை சக்தி (கடவுட்கொள்கை) இயற்கையிலேயே மதமாக மாறியது இல்லை என்று வாதிடுகிறார். பைபிளும், (The Bible) ஏனைய கீழை நாட்டு மதங்களும் பைபிள் சொல்வதைப் போன்றே படைப்புக் கொள்கையை ஆதரிக்கின்றன. படைப்பவர் ஒருவர் இருந்திருப்பார் என்று ஒருவர் நம்பினால், அது ஏதாவது ஒரு மதத்துடன் தொடர்பு உடையதாக இருந்திருக்கவே முடியும். படைப்புக் கடவுள் இல்லை என்று நம்புவதும், கடவுள் உண்டு என்று நம்புவதைப் போன்றதொரு மதச்சார்பே என்று டாக்டர் டி.கிஷ் வாதிடுகிறார்.

நம்முடைய இப்படைப்பியல் கொள்கை எந்த ஒரு பாட நூலிலும், இதுவரை நம்மால் இடம் பெற வைக்க இயலவில்லை. ஆனால் இவ்விரு கொள்கைகளையும் (பரிணாமக் கொள்கை, படைப்பியல் கொள்கை) மாணவர்களின் முன் வைத்து அவர்களே அவைகளைப் பற்றிய உண்மை நிலைப்பற்றிய முடிவினை எடுக்க வைக்க வேண்டும் என்று நாம் உணர்கிறோம் என்கிறார் டாக்டர் டி.கிஷ்.

ஒரு செல் உயிரி எங்கிருந்து தோன்றி இருக்க முடியும்?

இறைவன் இன்றி எல்லாம் இயற்கையாகத் தோன்றியதாக சென்ற நூற்றாண்டின் இன்றைய ஆராய்ச்சியாளர்கள் கருதினார்கள். டார்வினின் பரிணாமக் கொள்கை இதற்குத் துணைச் செய்வதாகக் கூறுகின்றனர். ஆனால் டார்வின் அவர்களோ தம்முடைய இறுதிக்காலத்தில், தன்னடைய கொள்கை பற்றி மிகவும் குழம்பியதாகவும், உடன் அதற்காக வருந்தியதாகவும் அறியப்படுகிறது. ஒரு செல் உயிரியிலிருந்து தான் (unicellular being) படிப்படியாக அனைத்து உயர் உயிரினங்களும் தோன்றியதாகக் கொண்ட அவர் தம் கொள்கையால் ஒரு செல் உயிரி எதினின்று தோன்றியது என்பதனை சரியாக விளக்க இயலவில்லை. சடத்தினின்று சித்து தோன்றுமா? ஒருக்காலும் அவ்வாறு தோன்றவியலாது. மேலும் டைனோசர் என்னும் விலங்கிலிருந்துதான் படிப்படியாக பறவை இனம் தோன்றியதாக டார்வின் பரிணாமம் சொல்கிறது. ஆனால் சமீபத்தில் சைனாவில் கிடைத்த படிமங்களை (Fossils) அதாவது டைனோசரும், பறவையும்

அடுத்தடுத்துக் கண்டெடுக்கப்பெற்றன. அவற்றை ஆராய்ந்ததில் அவை இரண்டும் சம காலத்தில் வாழ்ந்தவை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே டைனோசரில் இருந்துதான் பரிணாம வளர்ச்சியின்படி பறவை வந்தது என்ற வாதம் அடிபட்டுப் போய்விட்டது. மேலும் குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்கின்ற வாதம் இன்று வரை நிரூபிக்கப்படவில்லை; அப்படி எனில் ஒரு குரங்கு கூட இன்று வரை மனிதனாக மாறவில்லை என்பது இங்கு எண்ணற்பாலது. மேலும் சிலர் சூரியனின்றுதான் (ஒரு சிறு) இவ்வுலகாக வீழ்ந்தது. அது ஆறியபின் உயிர்களுடன் செழித்தது என்கின்றனர். அப்படியாயின் சூரியன் எதனின்று வீழ்ந்தது அல்லது தோன்றியது? தானாகவேவா? எப்படி? யாராலேயோ தோற்றுவிக்கப்பட்டது என்றால் அந்த யாராலோ யார்?

எண்ணற்ற சூரிய குடும்பங்கள் பிரபஞ்சத்திலே (Grand universe) தோன்றியும், இயங்கியும், சிதைந்தும் செயல்படுகின்றனவே இது ஏன்? எதற்காக? எப்படி? யாரால்? இன்றைய அறிவியலாளர்கள் அதற்கு தக்கப் பதில்களைத் தக்க சான்றுகளுடன் தர வல்லார்களோ? இல்லை. அவர்களால் இயலவே இயலாது.

சூரிய குடும்பம் (Solar System) இடையறாது ஓர் ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டு செம்மையாய் இயங்குகின்றதல்லவா? எப்படி? ஏன்? யாரால்?

குடும்பத் தலைவன் இல்லை என்றால் அக்குடும்பம் சிதைகின்ற அவலம்; ஊர்க்காவல் இல்லை என்றால் அவ்வூரில் நடைபெறும் விரும்பத்தகாத நடப்புக்கள்; அரசு நிர்வாகம் இல்லை எனில் அந்நாட்டில் கலகம், கொலை, கொள்ளை, பெண்மைச் சிதைத்தல் முதலியன நேர்கின்றன. இவற்றை மனதில் கொண்டால், உயிரற்ற, அறிவற்ற, சடங்களான நாளும், கோளும் பொம்மலாட்ட வித்தைப் போலச் செம்மையாகச் செயல்படுத்தப்படுவது யாரால் என்ற உண்மையினைத் தெளிவாக உணரவியலும், சடங்களை இயக்கும் அப்பேராற்றல் ஒருக்காலும் பேரறிவு அற்றதாக இருக்க முடியாது. அப்பேரறிவு கொண்ட பேராற்றலையே இறைவன் என்று சைவம் உட்பட அனைத்துச் சமயங்களும் பேசுகின்றன.

வாழும் வீட்டில் தான் விளக்குகள் ஏற்றப்படும். விளக்குகள் தானாக எரியாது. அதைப் போல வாழும் உலகிற்குத் தான் பகலில் பெருவிளக்கும் (சூரியன்) இரவில் சிறு விளக்கும் (சந்திரன்) எரிகின்றன. உழைக்கத் தேவையான பகல் வெப்பமும்வெளிச்சமும்

உறங்கத்தேவையான இவுத்தன்மையும் இது வெளிச்சமும் (சுந்திரன்) எவ்வளவு நுட்பமாக அமைந்துள்ளன!. இத்தகையதொரு ஏற்பாட்டினை ஏற்படுத்திய ஒருவன் கண்டிப்பாக இருத்தல் வேண்டும்! அவன் யார்?

சூரியன் - ஒரு பார்வை

படைப்பிலே சூரியனின் ஆற்றலும் அமைப்பும் ஒரு அதிசயமே. நம்மிடமிருந்து 93300000 (ஒன்பது கோடியே முப்பத்திமூன்று லட்சம்) மைல்களுக்கு (15 கோடி கிலோ மீட்டர்) அப்பாலுள்ள சூரியனிடமிருந்து நாம் பெறுகின்ற வீட்சண்யம் (Ray) என்கின்ற சூரியக்கதிர் நம்மிடம் வருவதற்கு முழுவதாய் 8 நிமிடம் 20 நொடிகள் ஆகின்றன. இதனின்று வருகின்ற புற ஊதாக்கதிர்கள் என்கின்ற அல்ட்ரா வயலட் (Ultra- Violet) மற்றும் இன்ப்ராரெட் (Infra-Red) ஆகிய இரண்டுமே சகல ஜீவராசிகளின் வாழ்க்கைக்கும் தேக ஆராக்கியத்திற்கும் ஆதாரமாக உள்ளன. இக்கதிரவன்தான் மூச்சுக்கலையில் பிங்கலையாகத் திகழ்கின்றான். மனித இருதய நாடியில் சூரிய கிரணம் சம்பந்தப்பட்டு இருக்கிறது.

வெப்பத்தின் தகதகப்பு மனித உடம்பில் உள்ளவரை தான் உயிரானது நிலைக்கும். சீதம் வியாபித்தால் உடல் விரைத்து சவமாகிறது. இத்தகைய வெப்பத்தைத் தருகின்ற கதிரவன், தனது ஒளியானது அனைத்துக் திசைகளிலும் சமமாகப் பரவுமாறு, உருண்டையாக அமைந்து இருப்பதும், அளவிடவியலா காலம் அது எரிந்து வரினும், அதன் தன்மை விகாரப்படாமல் தொடர்ந்து எரிந்து வரும்படி அமைந்து இருப்பதும் நாம் ஈண்டு சிந்தித்து வியக்கத்தக்கது. இன்றைக்கு 600 கோடி வயதான சூரியன் இன்னும் 400 கோடி ஆண்டுகள் வாழும் என்று நவில்கின்றது நமது இன்றைய அறிவியல். ஆயிரம் ஆண்டுகள் தீர்க்காயுளாக இருக்கும் நமது சூரியன். அதன்பின்னர் கரும்பொருளாக/கருங்குழியாக (Black Holes) மாறி மீண்டு காஸ்மிக் கதிர்களின் தூண்டுதலால் மீண்டும் ஒளி வீச ஆரம்பித்து பல்வேறு முறைகளாக மீண்டும் மீண்டும் தோன்றி இளஞ்சூரியனாக அதாவது தீர்க்காயுளுடன் திகழும் என்கின்றது இன்றைய அறிவியல். அதன் அடிப்படையில் வாசக அன்பர்களே! நமது சூரியன் பற்றிய ஒரு சில தகவல்களைக் கொடுத்துவிட்டு, இறுதியாக ஒரு வினாவினை உங்கள்முன் வைக்கலாம் என எண்ணுகிறேன்.

அனுமானத்தில் இப்படிப்பட்ட சூரியனின் வெப்ப ஆற்றலில் நமது பூமி பெறும் அளவு 0.00005% மட்டுமே. (இதனையே நம்மால் தாக்குப்பிடிக்க இயலாமல் Fan, Air Cooler, A/c, முதலானவற்றை பயன்படுத்தி வாழ்கிறோம்) இத்தகைய சூரியனின் விட்டம் (Diametre) 1.39 x 10^9 மீட்டராகும். ஆரம் 6.95 X10^8 மீ ஆகும். இதனின் எடை 1.969X 10^{30} கி.கி. ஆகும். அதாவது 1.969X10,000000000000000000000000000000 (இதன் விடைதான் சூரியனுடைய Mass எடை ஆகும்) வெப்பமிகு அடர்த்தியான வாயுக்களால் மட்டுமே ஆன இக்கோளில் அடிப்படையில் 75% ஹைட்ரஜன் (H_2); 25% ஹீலியம் (He); 1% விடக்குறைந்த அளவு நிறையுள்ள அணுமிகுந்த தனிமங்களையும் கொண்டது இச்சூரியனாகும். நைட்ரஜன் (N_2); மீத்தேன் (CH_4); நியான் (Ne) அம்மோனியா (NH_3); பெர்ரஸ் (Fe); சோடியம் (Na); போன்ற சுமார் 23 தனிமங்களைக் கொண்டது சூரியன் ஆகும். இத்தகைய சூரியனின் மையப்பகுதியில் உள்ள வெப்பநிலை ஏறக்குறைய 14X10^6லு ஆகும்; அதாவது 14 மில்லியன் கெல்வின் ஆகும். இத்தகைய வெப்பத்துடன் எரிந்து கொண்டு இருக்கும் சூரியன் தன்னைத்தானே ஒரு முறை சுற்றிவர எடுக்கும் நேரம் வெவ்வேறு அளவுகளை உடையதாகின்றது. முனைப்பகுதியில் சுழற்சியின் வேகம் 34 நாட்களாகவும்; நடுவரைப் பகுதியில் 25 நாட்களாகவும் அமைகிறது.

இத்தகைய சூரியனின் ஈர்ப்பு ஆற்றல், நமது புவிஈர்ப்பினைப் போல் 28 மடங்கு அதிகமாக உள்ளது என்றால் நீங்களே அதன் தனித்தன்மையை ஊகித்துக் கொள்ளுங்களேன்!

மேலே நாம் இதுவரை கண்ட சூரியனின் அமைப்பும், ஆற்றலும், அதன் செம்மையான செயல்பாடுகளும் தானாகவே அமைந்தன என்றால் அது ஏற்றுக்கொள்ள இயலாது. ஏனெனில் சடப்பொருளான வாயுக்களால் ஆன சூரியன் தானாகவே அமைந்து செயல்படாது. ஏனெனில் அதற்கு 1.அறிவு, இச்சை, செயல் கிடையவே கிடையாது. 2. எளிமையான வாயுக்கள் இயற்கையான தனது தனித்தன்மையின் மூலம் தானே (அவைகளாகவே) ஒருக்காலும் பிரபஞ்சமாக பரிணமித்து மாறி இருக்க இயலாது. (இது சூரியனுக்கும் பொருந்தும்) அப்படி மாறும் என்பது இயற்கை விதிகட்கு (Natural law) முற்றிலும் புறம்பானது ஆகும். எனவே இச்சூரியனின் செயல்பாடு யதார்த்தம் (More Chance) இல்லை என்றாகிறது. அப்படியாயின் இது எப்படி யாரால் அமைக்கப்பட்டு

Koviloor Digital Library

செயல்படுத்தப்படுகிறது? நன்றாகச் சிந்தித்தால் கிடைப்பது கீழ்க்கண்ட பதிலாகத்தான் இருக்கஇயலும்.

குயவனின்றி பானை இல்லை; கடவுளன்றி கதிரவன் இல்லை. நாம் நீர்மொண்டு பருகத்தான் பானை; உயிர்கள் உடல்கொண்டு வாழ்ந்திடத்தான் கதிரவன்.

அநாதியான உயிர்களுக்கு, ஆதி அந்தம் அற்ற பேராற்றலும், பேரறிவும் பெற்ற கடவுளால், மூலப்பொருளான மாயையினின்று தனது சிற்சக்தியின் துணையால், அனைத்து ஜீவராசிகளுக்கான உடல், உட்கருவிகள், இவ்வுலகு (கதிர்மதி உட்பட), உயிர்கள் உடல் கொண்டு அனுபவிக்கும் போகப்பொருள்கள் அத்தனையும் படைத்தளித்தான் என்கின்ற செய்தியினை இன்றைய பரிணாமவியல் விஞ்ஞானிகள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஏன் என்றால் அவர்கள், எதனால், எப்பொழுது, எப்படி என்ற வினாக்களுக்கு மட்டுமே விடைத்தேடி விளக்குகின்ற மனோநிலையிலுள்ளவர்கள். உதாரணமாகச் சூரியன் எப்பொழுது (எத்தனை ஆண்டுகட்கு முன்பு) தோன்றி இருக்கமுடியும்? சூரியன் எதனால் எரிந்து கொண்டு இருக்கிறது? அது எப்படி எப்படி செயல்படுகிறது? என்கின்ற வினாக்களுக்கான விடைகளைத்தான் அவர்கள் கண்டுபிடிப்பார்களேயன்றி மாறாக சூரியன் ஏன் அமைந்துள்ளது? அது எதற்காக யாருக்காக இவ்வாறு செம்மையாகச் செயல்படுகிறது? அது யாரால் படைக்கப்பெற்று இயக்கப்படுகிறது? என்கின்ற படைப்பியல் வினாக்களுக்கு அவர்கள் விடை காணமுயல்வதில்லை. இந்நிலையில் எப்படி அவர்கள் உண்மைத்தத்துவங்களை உணர்வார்கள்? உடன் ஏற்றுக் கொள்வார்கள்? அதனை எப்படி எல்லோருக்கு எடுத்து இயம்புவார்கள்?

பானையைப்பார்த்து இது எத்தனை ஆண்டுகள் பழமையானது? இது எதனால் செய்யப்பட்டது, இது எப்படி அமைந்து பயன்படுகிறது என்பதனை விளக்கும் பரிணாமவியல் விஞ்ஞானம், பானையைச் செய்தவன் குயவன்தான் என்பதை ஏனோ ஏற்றுக் கொள்ளத் தயங்குகின்றது. பானை யாரால் செய்யப்பட்டது? ஏன் செய்யப்பட்டது? யாருக்காகச் செய்யப்பட்டது. விலங்குகள் போல தாவரங்களுக்கும், கை, கால்,வாய், குருதி இவை இன்றி ஏன் படைக்கப்பட்டன? யாருக்காக இப்படி படைக்கப்பட்டு இருக்கின்றன? அப்படி படைக்கப்பட்டு இருப்பின் இவற்றின் செயல்பாடுகள் எப்படி இருக்கும்? என்ற வினாக்களைப் பரிணாமம் கண்டு கொள்வதே இல்லை.

Koviloor Digital Library

படைப்பில் தாவரங்கள்

படைப்பியலில் மரங்களும், மற்றைய தாவரங்களும் ஒரு வியத்தகு நுட்பத்தில் படைக்கப்பட்டுள்ளன. மரங்களின் வேர்கள் மண்ணில் புதைந்து இருப்பதனால் அவை இடம் பெயர்ந்து வாழும் தன்மையுடையன அல்ல. மரங்களுக்கு முக்கியமாக வாய், கால்கள், ரத்தம் இவை இல்லை. இவை இல்லாமல் ஏன் இவை படைக்கப்பெற்றுள்ளன என்பதை நாம் சற்று எண்ணிப்பார்ப்போம்.

மரங்களுக்கு மட்டும் வாய் இருக்குமாயின், அவற்றை வெட்ட முயலுகையில், அவை அலறும் அலறலை சற்றுக் கற்பனை செய்து பாருங்கள். புல் ,பூண்டு, செடிகொடிகளுக்கும் இது பொருந்தும்.ஆடு மாடு,கழுதை, குதிரை, எருமை, மான், யானை எல்லாம் அலறாநிற்குமா? ஓடாநிற்குமா? வீரப்பன் அவற்றின் மத்தியில் வாழ்ந்துவிட முடியுமா? விலங்குகளையும், சந்தனமரங்களையும் அவனால் வேட்டையாடிவிட இயலுமா? மரங்களுக்கு ரத்தம் வருமாயின் எந்த ஒரு சாதுவும் அவற்றின் இலையைக் கூட கிள்ள மனமின்றி பட்டினி கிடந்தே உயிரை விட்டுவிடுவான். சிந்தும் குருதியின் முடை நாற்றத்தால் சாகப்பட்ணிகள் (herbivoral) எல்லாம் மரக்கறி உண்ணாமல் மயங்கி மடியும். பசித்துப்பட்டினியால் வாடி மடியும்.

மரங்களுக்கு கால்கள் இருக்குமேயானால் மரங்களை வெட்டி போட்டு எவனும் சாலைமறியல் செய்துவிட முடியாது. அவை எல்லாம் அலறி அடித்துக் கொண்டு ஓடி வங்கக்கடலிலும், அரபிக்கடலிலும் விழுந்து தற்கொலை செய்து கொண்டாலும் கொள்ளுமேயன்றி எவனிடமும் அகப்படா. புல்பூண்டு செடி கொடிகளை எவையேனும் மேயமுடியுமா? அவை ஓடாமல் நிற்குமா?

மரங்களை என்ன செய்தாலும், அவை மௌனமாய் அசைவின்றி, அலறும் ஓசை இன்றி, துர்நாற்றம்மின்றி, கொட்டும் குருதி இன்றி, பொறுத்துக் கொள்கின்றன. அவற்றிற்கும் உயிர் உண்டு, உணர்வுண்டு, ஆசைவுண்டு, விருப்பமுண்டு, அறிவு உண்டு. செயல்பாடும் உண்டு பல்லுயிர்களுக்கும் அடைக்கலம் தந்து, வாழ வைத்து உயிருள்ள நிலையிலும், உயிரற்றநிலையிலும் அனைத்து வகையிலும் பிற உயிர்களுக்கு தன்னைத் தியாகித்துப் பயன் தருகின்றன. இவ்வாறு இல்லாமல் அவை வேறுவகையில் படைக்கப் பெற்று இருக்குமாயின் உலகம் எப்படி இருக்கும்? எப்படி இயங்கும் என்பதனைக் கற்பனையில் எண்ணிப்பாருங்கள்.

Koviloor Digital Library

படைப்பில், ஊன் உண்ணும் தாவரங்கள் (டிநப்பந்தஸ், வீனஸ், யுட்ரிக்குளோரியர்) தங்களின் நைட்ரஜன் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள பூச்சி இனங்களைக் கவர்ந்து பிடித்து உண்ணுகின்றன. படைப்பு அதிஷ்டவசமாக இவ்வாறு எல்லாத் தாவரங்களையும், மரங்களையும் படைக்கவில்லை. வேறுவகையாகப் படைக்கப்பட்டுள்ளன. மரங்கள் தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள விலங்குகளையும், மனிதர்களையும் பிடித்துத் தின்னாத தன்மையில் படைக்கப்பட்டுள்ளன. மாறாக அனைத்து விலங்குகளின், மாந்தர்களின் அனைத்துத் தேவைகளையும் அவை பூர்த்தி செய்ய தங்களையே தந்து தியாகம் செய்கின்ற வகையில் படைக்கப் பட்டுள்ளன. இப்படி பட்ட படைப்பியல் நுட்பத்தினையும், படைப்பின் ரகசியத்தையும் ஈண்டு நாம் சிந்தித்துணர்தல் நலம்.

'மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
நயனுடையான் கண் படின்'

அவ்வப்பொழுது முரண்படும் அறிவியல்

இன்றைய அறிவியல் என்பது சுட்டி அறியப்படுகின்ற சடப் பொருள்களைப்பற்றிய அறிவேயன்றி வேறல்ல. சடமற்ற உயிரைப் பற்றி விஞ்ஞானத்தால் ஆராய இயலாது. அதனை அறிந்து உணர்வது மெய்ஞானமேயாகும்.

ஒலியையும், ஒளியையும் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு விண்வழியே அனுப்பி, பலவிதமான வண்ணக் காட்சிகளைக் காட்டுகின்ற விஞ்ஞானம், அமெரிக்காவில் இருக்கின்ற மலரின் மணத்தினைச் சாட்டிலைட் கருவிகள் மூலம் ஐரோப்பாவிற்கும் ஏனைய ஆசிய நாடுகளுக்கும் ஏன் அனுப்ப இயலவில்லை; அல்லது ஏன் முயற்சிக்க வில்லை? அவ்வாறு இயலுமானால் நாறுகின்ற நமது நகரங்களையும், துர்வாடை வீசுகின்ற கூவங்களையும் மணக்க வைக்கலாமே?

மேலும் வளர்ந்து வரும் விஞ்ஞானம் நேற்றைய ஆய்வினை இன்று மறுபரிசீலனை செய்கின்றது. இதனால் தான் திரு. ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் அவர்கள் மதஅறிவு அற்ற அறிவியல் நொண்டி; அறிவியல் அறிவு அற்ற மதம் குருடு, என்று முழங்கினார். இவர் 1916-ல் ஆய்ந்து அறிந்த ரிலேடிவிட்டி தியரி, சர்ஜான் ஐசக் நியூட்டனின் பிரபஞ்சத் தோற்றத் தியரியைப் பொய்யாக்கி விட்டது.

Koviloor Digital Library

முன்னர் விஞ்ஞானிகள் அணுவைப் பிளக்க இயலாது என்று நம்பினர். அதாவது Atom என்பது மிகச் சிறிய இரண்டாகப் பிளக்க இயலாப் பொருள் எனக் கொண்டனர். பின்னர் (Atom can be devisible) அணுவைப் பிளந்து பெரும்சக்தியைப் பெறவியலும் என்றனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னரே ஔவையார் அணுவைப் பிளக்கவியலும் என்பதனை "அணுவைத் துளைத்து எழுகடலைப் புகட்டி", என்ற வரிகள் மூலம் வெளிப்படுத்தினார்.

25 ஆண்டுகட்கு முன்னர் விவசாயத்திற்கு ரசாயன உரங்களையும், ரசாயனப் பூச்சிக்கொல்லிகளையும் கடுமையாகப் பரிந்துரைத்த அறிவியல், இன்று விவசாயத்திற்கு தொழு உரங்களையும், பசுந்தாள் உரங்களையும், துளசி, வேம்பு இவற்றின் சாரத்தையும் அவற்றின் எண்ணெய்களையும் பூச்சிக் கொல்லியாகப் பயன் படுத்துமாறு வற்புறுத்துகின்றது.

அயோடின் கலந்த உப்பினால் தான் மூளைவளர்ச்சி முழுமைஅடையும் என்ற நேற்றைய விஞ்ஞானம், அவ்வுப்பால் ஆண்களின் விந்துவில் உயிரணுக்கள் மிகவும் குறைந்துவிட்டன என்று இன்று அலறுகிறது. உண்மை என்னவென்றால் நாம் உண்ணும் காய்கறி, கீரை, சாதாரணஉப்புஇவைகளேபோதும்,நமது உடலின் உப்புத் தேவைக்கும், உடலின் வளர்ச்சிக்கும், உணர்ச்சிக்கும், என்பது தான்.

ஜீன்கள் தான் உயிரிகளின் பண்புகளை மற்றும் ஓங்குத்தன்மை ஒடுங்குத்தன்மைகளை (Theory of Dominance and Recessive) நிர்ணயம் செய்கிறது என்ற ஜான் கிரிகர் மெண்டல் (John Gregar Mendel) அவர்களின் கொள்கை இன்று மறுக்கப்பட்டுவிட்டது. அனைத்து ஜீன்களுக்கும் ஒரே மாதிரியான குணங்களே உண்டு (ஓங்குதன்மை, ஒடுங்குத்தன்மை இல்லை), என்ற கொள்கைப் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. இவ்வாறு அவ்வப்பொழுது முரண்(டு) படுகின்றது விஞ்ஞானம்.

மூளையின் அளப்பரும் ஆற்றல்

மனிதனின் மூளையில் 1000 மில்லியன்களுக்கும் (1மில்லியன் = 10,00,000) மேலான செல்கள் உள்ளன. அவற்றிலே அளவிட்டுச் சொல்லவொண்ணா எண்ணிக்கைகள் உள்ள நரம்பு இணைப்புகள் அமைந்துள்ளன.

Koviloor Digital Library

நம் உடம்பில் உள்ள செல்கள் தினம் தினம் லட்சக்கணக்கில் அழிந்து கொண்டும், புதுப்பிக்கப்பட்டுக் கொண்டும் இருக்கின்றன. மூளையிலும் செல்கள் அழிகின்றன; ஆனால் அவை மட்டும் புதிப்பிக்கப்படுவதே இல்லை, எல்லா செல்களும் திறமையுடன் இருப்பதால் இறந்தவற்றின் பணிகளை ஏனைய செல்கள் செயல்படுத்துகின்றன. தற்போதைய ஆய்வுகள் இதனை மறுபரிசீலனை செய்கின்றன!? மூளை ஒரு பயங்கர சூப்பர் கம்ப்யூட்டர் போலச் செயல்படும் தன்மையுடையது. இதன் பல பாகங்கள் உயிரியல் ஆய்வு வல்லுநர்களாலேயே முழுமையாகத் திறனாய்வு செய்ய இயலவில்லை. அனைவருக்கும் மூளை ஒரேமாதிரி தான் இருக்கிறது. ஐ.க்யூ எல்லாம் அவரவர் பயன்படுத்தும் அளவிலேயே அமைந்து உள்ளனவாம். ஒரு சராசரி சாதா மனிதன் தனது மொத்த மூளையின் அளவில் வெறும் 2% மட்டுமே பயன்படுத்துகிறான்; புத்திசாலி 5% மட்டுமே பயன்படுத்துகிறான்; ஒரு அறிவியல் மேதை 7% மூளையையும்; ஒரு விண்வெளி விஞ்ஞானி 11% மூளையினை மட்டுமே பயன்படுத்து கின்றார்களாம்; ஏனையனவெல்லாம் (89%) பயன்படுத்தப்படாமல் உள்ளதாம். 11 % மூளையின் செயல்பாட்டிற்கே இவ்வளவு அறிவியல் வானியல், விண்வெளி சாதனைகள் என்றால் 89% பயன்பாட்டின் ரிசல்ட் எப்படிஇருக்கும் என்பதனை நாமே ஊகித்துக்கொள்ளலாம். தூக்கணாங் குருவிகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒரே மாதிரி (அதே மாதிரியாண) யான கூடுகளைத்தான் இன்றும் கட்டுகின்றன. காக்கைகள் காலங்காலமாக எப்படிக்கூடு கட்டினவோ அப்படித்தான் இன்று வரை கட்டுகின்றன; நாளையும் அப்படித்தான். வேறுவிதமாகக் கட்ட தெரியாது அவற்றிற்கு. ஆனால் மனிதன் மரப்பொந்து, குகை, குடிசை, ஓடு, மாடி, கோட்டை என்று ஆய்ந்து ஆய்ந்து கட்டிக்கொண்டு வாழுகின்றான். கால்நடையாகக் வழி நடந்தவன் இன்று காரிலும், கப்பலிலும், ஜெட்டிலும், ராக்கெட்டிலும் பறக்கின்றான். ஏனைய பறவை மற்றும் விலங்கட்கும் இத்தகை சிந்தனை செயல்பாடுகள் ஏன் அமையவில்லை? இன்றுவரை குரங்குகளில் ஒன்று கூட ஒரு கூடுகட்டிக் கொண்டோ, அல்லது ஒரு குடிசை போட்டுக்கொண்டு கூட வாழவில்லையே! ஏன்? படைப்பியலில் மனிதனுக்கு மட்டுமே அளவுகடந்த ஒரு மகத்தான சக்தி கொண்ட மூளை கிடைத்துள்ளது. முடிந்தவர்கள் இம்மூளையைப் பயன்படுத்திக் கொண்டு முன்னேற்றப்பாதையில் சென்று இனிதே வாழட்டும் என்றதொரு இறைவன் கருணையினைத்தவிர வேறு காரணம் என்னவாக இருக்கவியலும்?

Koviloor Digital Library

ஆனாலும் இம்மூளையின் அறிவு சில சமயங்களில் ஏனோ மறந்து பயன் அளிக்க மறுக்கின்றன. திரோதான சக்தி என்கின்ற மறைப்பு ஆற்றல் ஒன்றினைமறக்க வைத்துவிடும் போலும்! இதனாற்றான் வான்புகழ் வள்ளுவர் "நுண்ணிய நூல் பலகற்பினும் மற்றுந்தன் உண்மை அறிவே மிகும்", என்கிறார். நுண்ணிய நூல்களைக் கற்று அறிவுடையவனாக ஆயிடினும் அழிகின்ற ஊழில் அற்ப சொற்ப புத்திதான் செயல்படும். "காதன்மிக்குழிக் கற்றவும் கைகொடா, ஆதல் கண்ணகத்தஞ்சம் போலுமால்" என்று சீவகசிந்தாமணி பேசும். உடலில் எங்கு வலித்தாலும் அது மூளையால் உணரப்படுகிறது. படித்து மனனம் செய்து பல முறை எழுதிக்காட்டிய கட்டுரையின் முதல் வரி,தேர்வறையில் உட்க்கார்ந்து எழுதத்துடிக்கும் பொழுது ஏனோ நினைவிற்க்கே வருவது இல்லை பத்தாம்வகுப்பு மாணவனுக்கு. படனம் செய்த பதிகத்தின் முதல்அடி பக்தனுக்கு கூட கைக்கொடுப்பதில்லை. ஒரு சில சமயத்தில் ஏனிந்த இடர்பாடு? எதற்கிந்த அவலம்? ஆனால் மூளையின் எந்த ஒரு பகுதியையாவது சிறிய அளவு மின்னோட்டமுள்ள கம்பியால் தொட, மிக நீண்ட காலத்திற்கு முன் நடந்த நிகழ்ச்சிகள், உருவம், ஒலி, ஒளி, மணம் முதலியன அதிசயமாக நினைவிற்கு வருகின்றனவாம். அதேபோல மூளையின் சில இடங்களில் தொட, ஆனந்தமயமான உணர்ச்சி தோன்றுமாம். இந்த மூளை சில சமயங்களில் சிலருக்கு அசாத்தியமான நிலையில் தீர்க்கதரிசனமாக (foresight / prophetic vision) சில எதிர்கால நிகழ்வுகளை முன்கூட்டியே அறிவிக்கும் திறனுள்ளவைகளாக அமைந்துள்ளது. இதுவரை நடைபெற்ற ஆய்வுகளால் தீர்க்கதரினசம், உள்ளுணர்வு, கூடுதல் சிறப்பு உணர்வுத்திறன் என்கின்ற ESP (Extra sensury Perception) இவற்றில் அறிவியலால் ஆவது ஒன்றுமில்லை என்கின்ற நிலைதான் உள்ளது. ஏற்கெனவே தீர்மானிக்கப் பட்டவைகள்தான் உறுதியாக நடைபெறுகின்றன. இதனை சிலமூளைகள் மட்டுமே உணர்ந்து அறிகின்றன. நிகழ்வுகளைத் துல்லியமாக அட்டவணைப்படுத்தி மிகச் சரியான காலத்தில் நிகழ்த்துவது யார்? ஏன்? எப்படி? அவற்றைச் சில மூளைகள் மட்டுமே அறியமுடிகிறதே! அது ஏன்? எப்படி? எதற்காக? யாரால் எதனால்? தீர்க்கதரிசிகளின் மூளை ஏன், எந்த அளவிற்கு, எப்படி, எதற்காக அப்படி அமைந்துள்ளது? யாரால் அப்படி ஏன் அமைக்கப்பட்டுள்ளன? நாளை நடப்பதை இன்றே அறியக்கூடிய மானுடத்தின் தீர்க்கதரிசன மூளையின் செயல்திறனைப்பற்றி இன்றைய பரிணாமம் என்ன பதிலைக் கூறப்போகிறது?!

Koviloor Digital Library

நுண் உணர்வு

தனது கண்பார்வையின் அபரித ஆற்றலால் ஸ்பூனை வளைத்து அனைவரையும் அதிசயத்தில் ஆழ்த்திய யூகிரில்லர்; தமது அளப்பரும் சக்தியின் தொடு உணர்ச்சியாலேயே பலர் நோய்களை நீக்கிய ரஸ்புடீன்; உற்றுப்பார்ப்பதினாலேயே, உறக்கத்திற்கும் விழிப்புணர்விற்கும் இடைப்பட்ட நிலையை ஏற்படுத்தி மக்களின் நோய் வேதனைகளை அகற்றி, உதவி, அமைதிப்படுத்திய ஆண்டோலி காஷ் பிராவ்ஸ்கி: ஆத்மாவுடன் அளவளாவி நோய் நீக்கிய இவர்கள் அனைவரும் ரஷ்யர்களாவர். அறிவியலில் உயர்ந்ததொரு இடத்தில் இருந்த ரஷ்யா, மேற்சொன்ன இவர்களின் அதிசய ஆற்றல்களைப்பற்றி ஆராய்ந்து, இவை எல்லாம் அறிவியலுக்கு அப்பாற்பட்டவை என்று அறுதியிட்டுச் சொல்லிவிட்டது.

பல்கேரியாவில் உள்ள பெட்ரிக் கிராமப் பெண் வாங்கா இவள் முன் யார் சென்று நின்றாலும் அவரைப்பற்றிய முக்காலச் செய்திகளை மிகச் சரியாகச் சொல்லுகின்றாள். நன்றாகப் பார்வை தெரிந்த அவள் கண்கள், 17வது வயதில் முற்றிலும் பார்வை இழந்தன. பார்வை இழந்த நிலையில் இவள் பிறருக்கு கூறும், நடக்கவுள்ள நிகழ்வுகளை யாராலும் எவ்வளவு முயற்சித்தாலும் தடுக்க இயலவில்லையாம். ஒரு நபர் ஒரு குறிப்பிட்ட நாளில் சாலை விபத்தில் இறப்பார் என்றாள் வாங்கா. அவருடைய குடும்பத்தினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தனர். ஒரு அறையில் அவரைவைத்துப் பாதுகாத்தனர் அப்பொழுது எதிர்பாராத தந்தி ஒன்று வந்தது. அவர் சகோதரிக்கு ஆபத்து என்று அனைத்தையும் மறந்த அவர் வெளியே செல்ல, சாலை விபத்தில் மாண்டுவிட்டார். இதுபோல் எத்தனையோ அவள் சொன்னது நடந்தது. 30 ஆய்வாளர்கள் அவள் குறிசொல்லும் பொழுது அவள் அங்க இயக்கங்களை, அதிநவீனக் கருவிகளைக் கொண்டு ஆராய்ந்தனர். எதுவும் கண்டுபிடிக்க இயலவில்லை. எப்படி உன்னால் பிறர் எதிர்காலத்தைச் சொல்ல இயலுகின்றது என்று கேட்டால்? அவள் அதற்கு, என் முன்னால் நிற்பவரின் வாழ்க்கை சினிமாக்காட்சிப் போல அமைய அதனை என்னால் படிக்க இயலுகின்றது, பேசும் குரலையும் கேட்க இயலுகின்றது. அவ்வளவே என்றாளாம்.

வாங்காவைப் போலவே ஹாலந்து நபர் பீட்டர், இவர் ஒரு பெயிண்டிங் செய்து கொண்டிருக்கும் பொழுது 30 அடி உயரத்தில் இருந்து தவறிவிழுந்து விட்டார். மண்டை நொறுங்கி மூன்று மாதம் கோமாவில் இருந்து பின்னர் பிழைத்தார். நினைவு வந்தது. எதிரில் நின்ற

Koviloor Digital Library

நர்ஸின் வாழ்க்கைப் படம் டி.வியில் ஓடுவதைப் போலக் கண்டார். அது முதல் எதிரில் நிற்கும் எவரைப்பற்றிய தகவலையும் சொல்ல ஆரம்பித்தார்.

'மனமும், பிரார்த்தனையும்' என்ற நூலில் எம்.எஸ். உதயமூர்த்தி அவர்கள் ஒரு செய்தியைத்தருகின்றார். எட்வார் கேஸி என்கின்ற அமெரிக்கரை மருத்தவர் ஹிப்னாட்டைஸ் செய்து மயக்க நிலைக்கு கொண்டு செல்வார்கள். அந்நிலையில் பிற நோயாளிகளின் பல புரியாத புதிரான நோய்களைப்பற்றி, டாக்டர்கள் கேட்டால் எட்வார் கேஸி, அந்நோயாளியின், நோய்த்தன்மை, குணப்படுத்தும் முறை முதலியவற்றைத் தெளிவாகச் சொல்லுவாராம். மருத்துவர்களால் கணிக்கப்படவியலாதக் கோளாறுகளை எல்லாம் எட்வா கேஸி சரியாகக் கூறி நோயாளிகள் குணமாக உதவினாராம். ஒருவர் பெயரையும், இடத்தையும் குறிப்பிட்டுவிட்டால் அவரைப்பற்றிய அனைத்தும், பூர்வஜென்ம முதல் அடுத்த ஜென்மம் அத்துணை ஜாதகத்தினையும் புட்டுப்புட்டு வைக்கக் கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தாராம். இவர், இது எவ்வாறு சாத்தியம் என்று அவரைக் கேட்டால் தான், தனது மயங்கிய நிலையில் ஆகாயப் பேரேட்டினைப் (Akashic Record) படித்துச் சொல்லி விடுகிறேன் என்று கூறுவாராம். வேறொரு தீர்க்கதரிசியை அமெரிக்கப் போலீஸ் அண்டிக்கேட்டு, வேண்டி, குளுக்ககாப்பெற்று சில அசாத்தியக் குற்றவாளிகளைப் பிடித்து விடுவார்களாம். மேலும் இராணுவத்தினர் ரஷ்யாவின் ராணுவ ரகசிய கேந்திரங்களைப்பற்றிச் சொல்லுமாறு கேட்டு வற்புறுத்தினராம். அவர் மறுத்துவிட்டாராம்.

சுவாமி விவேகானந்தருக்கு இந்த ஆற்றல் இருந்தது. விண்காந்தப் பதிவில் உள்ளவற்றைப் CD கேசட் பிளேயர் போலப் படித்துப் பிறர் எதிர்காலம் கூறுவேன் என்று அவர் கூறியுள்ளார். தீர்க்கதரிசிகள் ஞானிகள்; திரிகால (லோக) சஞ்சாரிகள் இவ்வாற்றலைப் பெற்றவர்களே! காணாமற் போனதை மைபோட்டுப் பார்த்து சொல்லும் சங்கதிகள் நம் நாட்டில் பல நடந்துள்ளன.

இந்தச் செய்திகள் யாவும் கூறும் உண்மை என்ன? எழுதும் கீழ்க் கணக்கு இன்னம்பர் ஈசனே! அவர் எழுதியவற்றைப் படித்துணரும் ஆற்றல் அவன் தந்த திருவருளே! இப்படைப்பியல் தத்துவத்திற்கும், மறைப்பாற்றல் தத்துவத்திற்கும் பரிணாமவியல் என்ன பதிலைத் தரப் போகிறது?

Koviloor Digital Library

அண்டக்கதிர்களும் அருட்பெருங்கருணையும்

பீட்டாக்கதிர் (Beta Rays) வீச்சின் பொழுது அற்ப ஆயுளை உடைய நியூட்ரினோ (NEUTRINO) துகள்கள் வெளியிடப்படுகின்றன. அணுக்கருவினின்று சுயேச்சையாக வெளிவரும். நியூட்ரான் துகள் வெளிவந்த 12 நிமிடங்களில் புரோட்டான் துகளாக மாறுகின்றது. இம்மாற்றத்தில் ஒரு எலக்ட்ரானும், ஒரு நியூட்ரினோவும் வெளியேற்றப்படுகின்றன. இவ்வாறு பல துகள்கள் உருவம் மாறுவதால் பண்புமாறி அணுக்கருவிற்கு அல்லல் உண்டாகின்றது. அணுக் கூட்டமைப்பு தடைபட்டு அழிய ஆரம்பிக்கின்றது. இவ்விக்கட்டான நேரத்தில் காஸ்மிக்கதிர்கள் ஊடுருவி அணு அழிவைத் தடுத்து நிறுத்திக் காப்பாற்றுகின்றன. அவ்வாறு காஸ்மிக்கதிர்கள் ஊடுருவி அணு அழிவைத் தடுக்கவில்லை எனில் மூலக்கூறே இல்லாமல் போய்விடும். இது அறிவியல் ஆய்ந்து கூறும் உண்மை.

காஸ்மிக் துகள்களின் ஒழுங்கான ஊடுறுவலால் கிடைத்த நன்மைதான் படைப்பின் ரகசியம். இது இல்லை என்றால் அணு சிதைந்துவிடும். அணுச்சிதைவின் மூலக்கூறு இல்லாது போய்விடும். மூலக்கூறு இல்லை எனில் உடல்களே இல்லை; உடல் இல்லையேல் உயிருக்கு வேலை இல்லை; உயிருக்கு இங்கு வேலை இல்லை எனில் இவ்வுலகமே இல்லை; அல்லது தேவை இல்லை; எனவே உங்களின் பொருட்டே இந்த காஸ்மிக் கதிர்கள் அணுவைச்சிதையாமல் காத்து வருகின்றது. இந்த காஸ்மிக் கதிர்கள் எங்கிருந்து வருகின்றன? யார் அனுப்புவது? ஏன் அனுப்பப்படுகிறது?. உயிர்களின் பொருட்டே, இறைவன் தனுகரணபுவன போகங்களைப் படைத்தருளியுள்ளான். அவனுடைய அளப்பருங்கருணையே இந்த காஸ்மிக் கதிர்கள். இந்த காஸ்மிக் துகள்கள் மறைமுகமாக நிலைமின் புலப் பரப்பினைச் (Electro Static Field) சீராக வைத்துக் கொள்கிறது; இதனால் அணு அமைப்பு நிலைபெறச் செய்யப்படுகிறது; எனவே பிரபஞ்சம் நிலைப் பெற்றிருக்கிறது. இந்த நிலை மின்புலத்தில் உள்ள அணுக்கள் ஒளியினைப் பெற்று, தூண்டப்பெற்று நடனமிடுகின்றன. உயிரற்ற, அறிவற்ற, சடமான இந்த காஸ்மிக் கதிர்கள், யார் பொருட்டு, யாரால் இயக்கப்படுகிறது என்ற கேள்விக்கு பரிணாமம் என்ன பதிலைச் சொல்லப்போகிறது?

உயிர்களின் பொருட்டு இறைவனால் இயக்கியருளப் பெறுவதே காஸ்மிக் கதிர்கள் என்கிறது படைப்பியல். பரிணாமவியலால் இதனை மறுக்க வியலுமா?! முடியவே முடியாது.

Koviloor Digital Library

ஜீவ சிருஷ்டித் தத்துவம்

18 மில்லியன் ஆண்டுகட்கு முன்னர், சைபீரிய நாட்டின பனிக்கண்டத்தில் வாழ்ந்த ராட்சசக் கம்பளியானை (Woolly Mammonth) இன்றைக்கு இல்லை. இன்றையபிரமிக்கவைக்கும் யானையை விட சுமார் ஐந்து மடங்கு பெரியதான இதன் தோல் மிகக் கெட்டி; அதன்மீது அடர்ந்த ரோமம்; மிக நீளமான தந்தங்களை உடைய இதன் படிமங்கள் (Foissils) ரஷ்யாவின் கோலிமா நதிக்கரையில் கிடைக்கின்றன. இந்த பனிப்படிவங்களில், கிடக்கும் ஒரு யானையின் சேதப்படாத DNA செல் அல்லது ஒரு விந்து செல் கிடைத்தால் (கிடைப்பது என்பது குதிரைக்கொம்பே). அதனைக் கொண்டு குளோனிங் முறையில் (Cloning) பழைய ராட்சச யானையை மீண்டு உயிர்ப்பிக்கலாம் என்பது கோட்டோ, இரிதானி, கோபயாகரி ஆகிய மூன்று விஞ்ஞானிகளின் துணிபு. அவர்கள் பனிப்பள்ளங்களில் ராட்சச யானையின் செல்/விந்து செல்களைத்தேடி அலைந்து கொண்டு இருக்கின்றனர்.

இவர்களுக்கு விந்து செல் கிடைத்தால் அதனைக் கொண்டு இன்றைக்கு உள்ள பெண் யானையின் முட்டையுடன் அதனைச் சேர்த்து, அதனால் உண்டாகும் கரு ஒரு பெண்ணாகவோ அல்லது ஆணாகவோ உருவாகலாம். பெண்ணானால் அதன் முட்டையை எடுத்து மீண்டும் ராட்சச யானையின் விந்துவுடன் இணைத்து, இப்படி மேலும்மேலும் இம்முறையைக் கையாளும் பொழுது இறுதியில் ஒரு ராட்சச யானை உருவாக வாய்ப்பு உண்டு. இன்றைய யானைக்கும், அன்றைய கம்பளி ராட்சச யானைக்கும் உடற்கூறுகளில் ஒற்றுமை நிறைய உள்ளதால் இது ஓரளவிற்குச் சாத்தியமே.

மாறாக செல்மட்டும் கிடைத்தால், இன்றைய யானையின் முட்டையை எடுத்து, அதன் செல்லில் உள்ள நியூக்களியசைப் பிரித்து எடுத்து, அந்த இடத்தில் ராட்சச யானையின் நியூக்களிசை நிரப்பி மின் அதிர்ச்சித் தர, செயற்கைக்கருக் தரிக்கும் நிலை உருவாகலாம். Dolly என்னும் ஆட்டுக்குட்டி இந்த முறையிலேயே உருவாக்கப்பட்டது. இதுதான் குளோனிங் முறை எனப்படும்.

இவ்வாறு அறிவியல் திறன் வலுவடைந்து, குளோனிங் முறையில் மனிதர்களையும் உருவாக்க கூடிய அளவிற்கு வந்தாகிவிட்டது. தாய்லாந்து நாட்டில் உள்ள மஹிதால் பல்கலைக்கழக ஆய்வுக்கூடம் சோதனைக்குழாய் யானைகளை உருவாக்கி வெற்றி கண்டுள்ளனர். இவையெல்லாம் வியக்கத்தக்க விஞ்ஞான

முன்னேற்றம் என்பதில் ஐயம் இல்லைதான். ஆனால் இங்கு நமது வினா என்னவென்றால், சேதப்படாத DNA உள்ள செல் அல்லது விந்து செல் இது மிகவும் முக்கியம். இது சேர்வது இன்றைக்கு வாழக்கூடிய ஒரு ஜீவனின் உயிர் முட்டை. ஆக உயிர்ப்பொருள் உண்டாக ஒரு உயிர்ப்பொருள்தான் வேண்டுமேயன்றி வேறல்ல. சித்தாந்தம் என்ன சொல்கிறது. இல்லது தோன்றாது; உள்ளதே சிறக்கும். சடத்திலிருந்து சடம் தோன்றாது. உயிர்ப்பொருளில் இருந்துதான் உயிர்ப்பொருள் தோன்றவியலும்.

அதுதானே இன்றைய அறிவியலில் நிகழ்ந்து கொண்டுள்ளது. ஒரு சடப்பொருளினின்றோ அல்லது சடமான ஒரு வேதிப்பொருளின்றோ மட்டுமே இவர்களால் ஒரு ஜீவனை சிருஷ்டிக்க முடியுமென்றால், அன்றே படைப்பியலின் ரகசியம் ஊரறிந்த ஒன்றாகிவிடும். இல்லை எனில் இவர்களின் பரிணாமப் வளர்ச்சி ஏனையப் பிற எல்லாம் படைப்பியலின் தத்துவ உண்மைக்கு முன்னர் கதிர் கண்டப் பனிபோல் மறைந்து தான் போகும்.

அறிவியலின் டாப் குவார்க்கும் ஆன்மீகத்தின் (சைவ சித்தாந்தத்தின்) மாயையும்

அணுவுக்குள் இருக்கின்ற உள்ளணுக்களில் ஒன்றான டாப்குவார்க் (Top Quark) என்னும் நுண்பொருளினை இயற்பியல் அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதுவரை புரோட்டான், நியூட்ரான் உள்ளிட்ட கருவினையும், அதனைச் சுற்றிவரும் எலெக்ட்ரானையும் கொண்டதுதான் ஒரு அணு என்று நிரூபிக்கப் பட்டுள்ளது. இப்பொழுது கருக்களில் உள்ளிருக்கும் புரோட்டான்களில் டாப்குவார்க்குகள் என்னும் அதி நுண்பொருள் உண்டு என்று ஓரளவு கண்டு பிடித்துள்ளார்கள். இந்த டாப் குவார்க்கு தான் Matter என்று சொல்லக்கூடிய உலகப்பொருள்கள் அனைத்திற்கும் அடித்தளம் என்று அறியப்பட்டு இருக்கின்றது. பெர்மி நேஷனல் ஆய்வகத்தில் அணுவிற்குள் உள்ள புரோட்டானைப் பிரித்து, அதனைத் தகர்த்து, அதனின்னு எதிர்மறைப் புரோட்டான்களை (Anti-proton) வெளிப்படுத்தினர். அந்நிலையில் வெளிப்பட்ட சக்தியினை ஒரு திண்மப் பொருளாக (Mass) மாற்றியபொழுது புதுமையானதொருப் பொருள் கிடைத்தது. அது அளவிலே மிகப் பெரிதாக அமைந்தது. அதாவது ஒரு

Koviloor Digital Library

டென்னிஸ் பால் அளவு கிடைத்தது. இவ்வாறு உள்ளதை மற்றவையோடு மோதச்செய்தால் ஒரு கால்பந்து அளவிற்கு கிடைக்கின்றது. இதனைத்தான் அறிவியல் டாப் என்கிறது. டாப்பை யாரும் பார்க்க இயலவில்லை. அதன் ஆயுளோ ஒரு நொடியில் கோடி கோடியில் ஒரு பங்கே ஆகும். சூப்பர் கம்ப்யூட்டர்களின் துணையுடன், சுமார் 11/2 கோடி புரோட்டான்களை உடைத்துக் கிடைத்த ஆய்வுகளின் அடிப்படையில் டாப்பின் உண்மைக்கு 12 தடயங்களைக் கண்டறிந்துள்ளனர். சோதனைகளை மேலும் தொடர்ந்து கொண்டேயுள்ளனர். ஆனாலும் இவர்களின் சான்றுகள் எல்லாம் அறிவியலை விட அனுமானத்தையே பெரிதும் நம்பியுள்ளன. மென்மேலும் இவர்களின் ஆய்வு, செல்லுமிடம், செல்லும் தூரமும் சிவஞான சித்தியாரில் விளக்கப்பட்டுள்ள சைவ சித்தாந்த மாயையை நோக்கியே செல்லுகின்றது.

நித்தமாய், அருவமாய், ஏக - நிலையதாய், உலகத்திற்கோர்
வித்துமாய், அசித்தா யெங்கும் - வியாபியாய், விமலனுக்கோர்
சத்தியாய், புவனபோகந் - தனுகரணமும் உயிர்க்காய்
வைத்தோர் மலமாய், மாயை - மயக்கமும் செய்யுமன்றே

என்று சிவஞான சித்தியார் பேசும்.

விளக்கம்: உலகிற்கு முதற்காரணம் என்று கூறப்படுகின்ற (அசுத்த) மாயையின் இலக்கணம் பின்வருமாறு. இது உற்பத்தி இல்லாதது; எனவே நித்தியம் ஆனது; கண்ணுக்குத் தோன்றாதது. எனவே அருவமானது; அனைத்திற்கும் வித்து ஆனதால் மூலமானது; அறிவு அற்றதால் சடமானது; எவ்விடத்திலும் உயிர்கட்குத் தனுகரண புவன போகங்களைக் கொடுப்பதால் வியாபகமானது; இறைவனின் வியாபகத்துள் அடங்கலால் அவன் வைப்பு ஆற்றலாக ஆனது; உயிர்களின் பொருட்டு தனு கரண புவன போகமாக விரிவதால் ஒரு மலமானது; உயிர்கட்கு விபரீத உணர்வினைத் தரவல்லதால், மயக்க வைக்கும் தன்மை உடையது இம்மாயை.

மாயை என்கின்ற பிரிக்க முடியாத அதிநுண்பொருள் நித்தியமானது; மாறாதது; அரூபமானது; பிரிக்க ஒண்ணாதது; இறைவனின் சக்தியாய்யமைவது; உடல், உட்கருவிகள், உலகம், உலகின் அனைத்துப் பொருள்களுக்கும் மூலமாய் அமைந்து உயிர்களுக்கு மயக்கத்தினையும் செய்யவல்லது இஃது என்கிறார். சிவஞானசித்தியார்.

Koviloor Digital Library

இறைவனின் சங்கலபமும், அவனின் பரிக்கிரக ஆற்றலான இம்மாயையும் தான் இப்பிரபஞ்சமும், உலகத்து உடல்கொண்ட உயிர்களும், ஆகும். மாறாக சடம் தானாக அமைந்து வேதியியல் மாற்றத்தால் முதல் உயிர் தோன்றி பின்னர் பரிணாமத்தினால் தான் இன்றைக்கு உள்ள அனைத்து உயிர்களும் என்றால் அதனை எவ்வாறு, ஏற்றுக்கொள்ளவியலும்; நம்பவியலும், உயிர்ப்பொருளின்று தான் உயிர்ப்பொருள் தோன்றுமேயல்லாது, சடத்தினின்று உயிர்ப்பொருள் ஒருக்காலும் உருவாக இயலாது. இன்னும் டாப்குவார்க்கின் வாழுங்காலத்தினைக் கண்டுபிடிக்க இயலவில்லை. அதன்பிறகு டாப்புக்குள் ஒரு சூப்பர் டாப் இருக்கின்றது என்ற அனுமானத்தில் சோதனைகள் மேலும் வளரலாம். என்றாலும் சித்தியாரை என்றைக்கு அறிவியல் உணர்கின்றதோ அன்றுதான் படைப்பியலின் உண்மையினை அறிவியலால் அறிந்து கொள்ளவியலும்.

இன்றைய பல விஞ்ஞானிகள் ஆய்வுப்பொருள்களைப் பிரத்தியட்ச அளவையில், நேரிடையாகக் கண்டு, ஆய்வுப் பொருள்களை ஆய்ந்து விளக்கம் கூறாமல், அவை செய்பவை என்னென்ன, செயல்பாட்டின்பொழுது விட்டுச் சென்ற எஞ்சிய தடயங்கள் என்னென்ன என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, அனுமானத்தின் பெயரில் சில செய்திகளைக் கூறுகின்றார்கள். அனுமானங்கள் என்பவை ஆன்மீகத்தின் அணுகுமுறை. பொதுவாகவே ஆன்மீக அருளாளர்கள் எல்லோரும் அறிவியல் அறிவு பெற்றவர்களாகவே இருந்திருக்கிறார்கள் இருக்கின்றார்கள். ஆனால் அறிவியலாளர்கள் எல்லோரும் ஆன்மீக அறிவுள்ளவர்களாக இருப்பதில்லை. அனுமானத்தைக் கைக்கொள்ளும் இவர்கள், அறிவியல் என்பது சுட்டி அறியப்படும் சடப்பொருள்களைப் பற்றியே, அதனைச் சுற்றியேதான் உள்ளது என்பதும்; உயிர்ப்பொருள்களை உணர, ஆய்வு செய்ய அறிவியல் ஓரளவிற்கு தான் ஆய்வுகளில் அடிப்படைத்தன்மை கொண்டது என்பதனையும்; பேரறிவுப் பொருளாகிய Grand Soul எனப்படுகின்ற இறைவனை ஆய்வு செய்ய சடப்பொருள்களால் ஆன கருவிகளால், ஆய்வுக்கூடங்களால் ஒருக்காலும் ஆகவே ஆகாது என்பதனை ஏற்க ஏனோ தயங்குகின்றார்கள். அறிவியல் உண்மைகளை அனுமானிக்கும் இவர்கள், பரிணாமத்திற்கும் அத்தகைய அனுமானங்களை கைக்கொள்கிறார்கள்; ஆனால் படைப்பியல் ரகசியத்தை அறிய, தர்க்க ரீதியான அறிவியல் அனுமானத்தை ஒரு சிறு அளவிற்குக் கூட இவர்கள் அங்கீகரிப்பதே இல்லை. இது அறிவியலாளர்களுக்கு ஒரு தலையாய


கௌரவப் பிரச்சனையாக இருக்கும் போல் தெரிகிறது.

சில அறிவியல் வல்லுனர்கள், தங்களின் ஆய்வு முடிவுகளைப் பற்றிய சில ஐயங்களை, உள்ளுணர்வின் (Intuition) மூலமாக E.S.P. மூலமாக, அல்லது கனவுகள் வாயிலாகத் தெளிந்து கொண்டுள்ளனர். தேவையான வினாக்களையும், தீர்வுகளையும் மேற்கண்டவற்றின் வாயிலாக உண்மையிலேயே தீர்த்துக் கொண்டு உள்ளார்கள் என்பதனை வரலாறு தீர்க்கமாகப் பேசும்.

கிரேக்க நாட்டின் கைத் தையல்காரன் ஒருவனுக்கு குறைந்த நாளில் அதிக ஆடைகளை தைத்துக் கொடுக்குமாறு அந்த நாட்டு அரசன் ஆணையிட்டான். அதை ஏற்றுக்கொண்ட அந்த தையல்காரன் கவலையுடன் வீட்டுக்குச் சென்றான்; ஏன்னென்றால் குறைந்த நாட்களில் குறிப்பிட்ட அதிக அளவு துணிகளைக் கையால் தைக்க முடியாது; மேலும் இதைச் செய்யவில்லை என்றால் அரசனின் தண்டனைக்கு ஆளாக நேரிடும். எனவே இதனை எண்ணி எண்ணி கவலை மிகக் கொண்டான்.

அன்றிரவு ஆழ்ந்த உறக்கத்தில், அவன் இருக்கும் பொழுது அந்த நாட்டின் போர்க்களக் காட்சி ஒன்று அவன் கனவில் தோன்றியது. அதில் வீரன் ஒருவன் தன் ஆயுதத்தால் (சுளுக்கி, சூலம்) போன்றவைகளால் எதிரிகளை வயிற்றில் குத்தி இழுத்தான், அதில் எதிரியின் குடல் சூலத்தின் முனையில் மாட்டி இழுத்துக் கொண்டு வெளியில் வந்தது. இந்த காட்சி அவனுடைய கனவைக் கலைத்தது. இதனை ஆழ்ந்து சிந்தித்த அந்தத் தையல்காரன், இதன் நுட்பத்தைத் தனது தையல்வேலைக்குத் தொடர்பு படுத்தி புதிய தையல் ஊசியைக் கண்டுபிடித்தான். இவ்வாறு தான் இன்றை தையல் எந்திரம் உண்டானது.

அதேபோல் பென்சின் கண்டுபிடித்த விஞ்ஞானிக்கு அதன் குறியீட்டினை எவ்வாறு போடுவது என்பதில் பெருங்குழப்பம் இருந்தது. உறங்கும் பொழுது கனவில் ஒரு பாம்பு தன் வாயால் தன்வாலையே கவ்விக் கொள்வது போலக் கனவுக்கண்டார். விழித்துக் கொண்டு கனவின் பொருளை ஆழ்ந்து சிந்தித்தார் அதன் விளைவுதான் பென்சினிக்கான



இந்தக் குறியீடு. ஆச்சர்யமாக இல்லையா?

Koviloor Digital Library

To be Out of Body experience என்று சொல்கின்ற உடல் தவிர்த்த உணர்வு என்கின்ற ஒன்றினை, அதன் அளவிட இயலா ஆற்றலை இன்றைய அறிவியல் எவ்வாறு அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளப் போகிறது: அதனை ஏற்றுக் கொள்ள முன் வந்தால் படைப்பியலை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் அவர்களுக்குக் கண்டிப்பாக வந்துவிடும் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை.

இறைவன் இயற்றிய தனு,(உடல்) கரண,(உட்கருவிகள்) புவன,(உலகம்) போகங்கள் (அனுபவப் பொருள்கள்)

ஏற்றுக்கொள்ளத் தக்க வகையிலே இறைவன் மிகவும், நுட்பமும் சிக்கலும் வாய்ந்த தனு என்கின்ற உடலை குறிப்பாக மனித உடலை (உட்கருவிகளோடு) தனது சிற்சக்தியின் துணையால், மாயை என்கின்ற நுண்பொருளினின்று எவ்வாறெல்லாம் நுணுக்கமாகப் படைத்துள்ளான் என்பதனைப் பற்றிய அறிவியல் ரீதியாகச் சற்று சிந்திப்போம்.

அணுசக்தி ஆய்வுக்கூடங்களிலும், அணுஉலைகளிலும், விண்வெளி ஆய்வுக் கூடங்களிலும், பொருள்களை வடிவமைத்து வெளிவருகின்ற தொழிற்சாலைகளிலும், இயங்குகின்ற இயந்திரப் பொறிகளின் தன்மைகளும் செயல்பாடுகளும் நம்மைப் பிரமிக்க வைக்கின்றன. ஆளில்லா விமானங்களைக் கட்டுப்பாட்டில் வைக்கும் கருவிகள்; விண்வெளி ஆய்வுக்கூடங்களைத் தரையில் இருந்து இயக்கும் பொறிகள்; ஏவுகணைகள்: சூப்பர் கம்ப்யூட்டரின் செயல்பாடுகள் இவையெல்லாம் மனித மூளையின் செயல்பாடுகளே.

கரும்பாக ஆலைக்குள் நுழைந்தவை எல்லாம், வெண்மணல் போன்ற சர்க்கரையாக,மூட்டைக்குள் வைத்துத் தைக்கப் பெற்று வெளிவருகின்ற அதிசயம்: இரும்பாக உள்ளே நுழைந்த கனிமம், கண்கவர் வண்ணத்தில் சாலைகளில் உருண்டோடும் கார்களாக வெளிவரும் அதிசயம்; இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம் ஆயிரம் ஆயிரமாக. இவை எல்லாம் புதிதாகப் பார்க்கின்றவர்களுக்கு பெருவியப்பே! ஆனால் மிகவும் பயங்கரமானதும், பிரம்மாண்ட மானதும் ஆன ஒரு செயல்திறனுள்ள பொறியினை வடிவமைத்து அதனைச் செயல்படவைத்திருக்கின்ற இறைவனைப் பற்றித் தெரிந்துக் கொள்ள வேண்டுமெனில், அவனால் படைக்கப் பெற்ற மனித உடலையும், மனித மூளையினைப் பற்றியும் அறிந்து கொண்டாலே போதும். சர்வ

Koviloor Digital Library

வல்லமையுள்ள சிவபெருமான் உயிர்களின் இச்சைப்படியே உடலுக்கு வடிவம் தந்து செயல்பட வைத்துள்ளான். இதில் இறைவன் உடலைப் பல அமைவுகளாகப் படைத்துள்ளான்.

அதன் மூலம் உயிர் தங்கி இருந்து அனைத்தையும் அனுபவிக்கும் வண்ணம், சீரண மண்டலம் (Digestive system) ரத்த ஓட்ட மண்டலம் (Circulatory System) சுவாச மண்டலம் (Respiratory System.) நரம்பு மண்டலம் (Nervous System) தசை மண்டலம் (Muscular System) எலும்பு மண்டலம் (Skeletal System) இனப்பெருக்க மண்டலம் (Reproductive System) கழிவு மண்டலம் (Excretory System) என்கின்ற மிக மிக நுணுக்கமும் புரியாத சிக்கல் மிகுந்ததுமான இவைகளையும், இவையன்றி மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்கின்ற மூளையின் கூறுகளையும் இறைவன் அமைத்துள்ளான்.

சித்தாந்தம் இதனை ஞானேந்திரியங்கள் (மெய், வாய், கண், மூக்கு, செவி) எனவும், கன்மேந்திரியங்கள் (கால், கை, வாய், எருவாய், கருவாய்) எனவும் அந்த கரணங்கள் (மனம், புத்தி, அகங்காரம் சித்தம்) எனவும் விளக்கும்.

இதில் கருவாய் என்பது (Sex System) மனிதர்களை ஆண் என்றும், பெண் என்றும் இரு இனப்பிரிவுகளாகப் பிரிக்கின்றது.

இது தான் காதல் என்கின்ற ஒன்றினைத் தூண்டிவிட்டு, இல்லறம் என்கின்ற ஒன்றினை நாடவைத்து, குடும்பம், வீடு, மக்கள் என்றெல்லாம் மனிதனை நாட வைக்கின்றது. அதில் சிக்கி மூழ்க வைக்கின்றது. இக்கருவாய் என்கின்ற அமைப்பு (Genital System) நேரடியாக நரம்பு மண்டலத்துடனும், மனம் தசை மண்டலத்துடனும் ஒருங்கிணைக்கப் பெற்றுள்ளது. (மனம் என்ற சொல் Mind என்ற ஆங்கிலப் பதத்திற்கு ஆகப் பயன்படுத்தப்பட்டுள்ளது)

பெண்பால் நாளமில்லாச் சுரப்பிகள் பெண் உடல் மனத்தை நிர்ணயம் செய்து பெண்மையாக்குகின்றது. ஆண் பால் நாளமில்லாச் சுரப்பிகள் ஆணின் உடல் மனத்திற்குக் காரணமாகி ஆணாக பரிணமிக்கச் செய்கிறது. எனவே இவ்வாய்வுக் கட்டுரை கருவாய் அமைவைப் பற்றிச் சிந்தித்து, அதன்மூலம் படைப்பியலின் தன்மைகளைப் பற்றியும், பரமனின் பேராற்றலைப் பற்றியும், ஓரளவு உணர உதவிடும் என்பது அடியேனின் எளிய அபிப்பராயம்.

Koviloor Digital Library

படைப்புத் திறன்

விதைப்பை என்கின்ற மிகத்தளர்த்தியான பையினுள் அடங்கியவைகளாக இரு விதைகள் அமைந்துள்ளன. இவ்விதைகள் நீள்வட்ட வடிவச் சுரப்பிகளாகும். டெஸ்ட்டிக்கிள் (Testicle) என்று சொல்லப்படுகின்ற மனித விதையின் உள்ளே மிகமிக நுண்ணிய வலைபோல் பின்னப்பட்டுள்ள அதிநுண்ணிய குழாய்கள் உள்ளன. இக்குழாய்களை நீட்டிவைத்து அளந்து பார்த்தால் அதன் நீளம் ஒரு மயிலுக்குமேல் நீளும். இவ்வளவு நீளமுள்ள இந்நுண்ணிய குழாய்கள் வலைபோல் பின்னி வளைத்துச்சுருட்டி வைக்கப்பட்டுள்ளது. இக்குழாய்கள் விந்து அணுக்களை உற்பத்தி செய்கின்றன. ஒரு மணிநேரத்தில் பலகோடிகணக்கான விந்து அணுக்களை இக்குழாய்கள் (சுரப்பிகள்) உற்பத்தி செய்கின்றன. நுண்பெருக்கி (ஆடி) வழியாகப் பார்த்தால் சிறிய தலைப்பிரட்டைப்போலக் காணப்படும் இவைகள் சிறுகுழாய் வழியே செல்லும். பின்னர் இந்தச் சிறு குழாய்கள் ஒன்று சேர்ந்து விந்துக்குழாய் ஆகின்றது. இத்தகைய விந்தணுக்களைத் தயாரிக்கும் நுண்குழாய்கள் மிகவும் குறுகலானவை. ஒரு மெல்லிய தலைமுடியைக் (Hair) கூட இதனுள் நுழைக்கவியலாது என்றால் அவற்றின் நுணுக்கத்தன்மையினை நீங்களே எண்ணிப் பாருங்கள்! இதைச் சொல்வதன் நோக்கமே ஆறு அடி உயரமுள்ள மனிதன் தனது இந்த நிலையை அடைவதற்கு முன், ஆரம்பக்காலத்தில் இவனின் வாழ்க்கைத் துவக்கப் பயணத்தின் பொழுது, இவன் அளவும் வடிவும் எப்படி இருந்தது என்பதனை எண்ணிப்பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான். அதிலும் இவனின் பாதிதான் இது. அவனின் மீதி பெண் முட்டைக்கருவில் உள்ளது தான். எண்ணிப்பாருங்கள்! படைப்பாற்றலின் திறத்தை!; உயிருக்கான உடலைப் பக்குவமாகப் படைத்த இறைவனின் நுட்பமான பேரறிவினையும், பேராற்றலையும்; அதிநுட்பத்தினையும், அதிமிகக் கவனத்தினையும்; துல்லியமான இயக்கச் செயல்பாட்டினையும், அவன் அருள் நோக்கினையும் ஓரளவாது நாம் இங்கு கருத்தில் கொண்டு சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். அப்பொழுதுதான் இறைவனின் தன்மையை ஓரளவாது நாம் உணர்ந்து கொள்ளவியலும். மேலே குறிப்பிட்ட ஒரு மைல் நீளத்திற்கும் அதிகமான நுண்ணியக் குழாய்கள் விந்துச் சுரப்பிகள் - Canals or Convoluted tubes - எல்லாம் ஒன்றிணைந்து Vasa efferentia என்று சொல்லக்கூடிய ஒரு சற்றுப் பெரிய குழாயில் இணைகின்றன. இவை

Koviloor Digital Library

எல்லாம் Epididymus என்று சொல்லக்கூடிய குழாயில் இணைகின்றன. (இவை பக்கத்துக்கு ஒன்றாக 48 செ.மீ நீளமுள்ளது. இவை விதைகளினின்று புறப்பட்டு இடுப்பு வழியாகச் சென்று இடுப்புக் கூட்டினை அடைகின்றன.) Scrotum என்று சொல்லக்கூடிய விதைப்பையில் இவை வைக்கப்பட்டு (encased) உள்ளன. Seminal Duct/tuble என்று சொல்லக்கூடிய Vassdeferencs விந்துக்குழாயாக 45 செ.மீ நீளமுள்ள வகையில் அமைந்துள்ளது. இவைதான் Sprematozoa என்கின்ற விந்தணுக்களை Seminal Vesicle கொண்டு செல்கின்றது. மனிதனுக்கு உள்ள இரண்டு பக்க விதைகளிலும் இவ்வமைப்பு உண்டு.

இந்த விதைகள் இன அடையாள ஆண்பால்கூறு எனப்படும். ஆண்பால் ஹார்மோன் ஒன்றையும் சுரக்கின்றன. பருவம் அடையும் பொழுதில் உடலில் ஏற்படும் பல விதமான மாற்றங்களைச் செய்வது இந்த ஆண்பால் ஹார்மோன் தான்.

உடன் பிறந்தது

ஆஸ்திரேலியாவில் உள்ள ராயல் குழந்தைகள் ஆஸ்பத்திரியின் மருத்துவர்களான டாக்டர். பிராங்க் ஓபர்கிளாய்ட், மார்காட் பிரீயர் இணைந்து 2500. குப்பங்களில் உள்ள குழந்தைகளைக்கொண்டு ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின் முடிவில் இவர்கள் கண்டறிந்த உண்மை என்னவென்றால், குழந்தைகளுக்கு உள்ள முன்கோபம், பயம், வெறுப்பு, விருப்பு, ஒளிதல், அழுதல் போன்ற குணங்கள் யாவும் வளர்ப்பினால் வருவது அல்ல; பிறப்பிலிருந்தே இக்குணங்களும், சில பழக்கவழக்கங்களும் உருவாகி விடுகின்றன என்பதுதான். சில குழந்தைகள் வீட்டில் உள்ளபொழுது வீட்டுப் பொருள்களைப் போட்டு உடைத்துக் கொண்டே இருக்கும்: யார்மீதாவது கோபம் கொள்ளும் பொழுது அவர்கள் மீது பொருள்களை வீசி அடிக்கும்: பள்ளிசெல்லுகையில் தேவை இல்லாமல் மற்ற குழந்தைகளுடன் சதா வம்பு செய்து சண்டைப்போட்டு வீண்ப்பிரச்சினைகளை உருவாக்கும். இதுபோன்ற குணங்கள் பிறப்பில் இருந்தே உருவாகி விடுகின்றன; வளர்ப்பினால் ஓரளவு இதுபோன்ற குணங்களை மாற்ற முயற்சிக்கலாம். இத்தகையக் குணங்கள் குழந்தைக்குக் குழந்தை மாறுபடுகிறது. ஒரே மாதிரியான நடவடிக்கை எல்லாக் குழந்தைகளையும் சரியாக்காது மாற்றாது.

Koviloor Digital Library

மாற்றங்கள் தற்காலிகமாகவும், அச்சம், கௌரவம் போன்ற சமூகப் பிரக்ஞைக்காகவும் தான் அடக்கிவைக்கப்படும். நெருக்கடியில் அவர்களின் உண்மை இயல்புக்குணம் கண்டிப்பாக ஒரு சிறிதளவாவது வெளிப்படாமல் இருக்காது. இந்த ஆய்வின், இந்த முடிவினை ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே, ஔவையார் "உடன் பிறந்தே கொல்லும் வியாதி" என்று அருளிச் செய்துள்ளார்.

பேறு இழவு இன்பமொடு பெரும்பிணி மூப்பு சாக்காடு இவ்வாறும் முன் கருவுட்பட்டது என்பார் சிவஞான சித்தியார். புத்திதத்துவத்தில் வைப்புநிதியாக உள்ள சஞ்சித கன்மத்தில் இருந்து பிராரத்தவினையை சிவபெருமான் அனுபவத்திற்காக ஊட்டிப் பிறப்பளிக்கின்றான். அவ்வனுபவத்தினைப் பெற வேண்டி நவகோள்களினின்று உமிழும் கதிர் வீச்சுக்கள் உயிர்களின் உதிரம், ஏனைய நிணநீர்கள், மூளை, நரம்பு, இருதயம், இரைப்பை, நுரையீரல் முதலானவற்றை ஆளுகின்றன; மேலும் மனிதனின் எண்ணம், சொல், செயல் இவற்றிலும் இவற்றின் தாக்கங்கள் அமைகின்றன. பரிணாம வளர்ச்சி என்பது எல்லாம், பொய்மை நடிப்பைக் கற்றுத்தந்தனவே அன்றி; உண்மை இயல்புக் குணத்தை ஒருக்காலும் மாற்றவில்லை. இதுதான் உண்மை. படைப்பியலின் ரகசியமே தனது குணத்தால் தானும் அனுபவித்து, பிற உயிர்களுக்கும் அனுபவத்தினை அளித்து அறிவு விளக்கம் பெறுதலும் பெற வைத்தலுமேயாகும்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிடுவோரின் அத்தகைய இயல்பினைத் தக்கதொரு நெருக்கடியில்தான் அறிந்து உணரவியலுமே அன்றி வேறு வழி இல்லை. இத்தகையதொரு அனுபவமும் சிவன் செயலேயன்றி வேறென்ன?!

அணுவின் கூறுகள்

அண்டப் பொருள்களும், பிண்டமாகிய மனித உடலில் அமைந்துள்ள (அனைத்துப்) பொருள்களும் ஒரேவிதமான அணுக்களின் சேர்க்கையால் ஆக்கப்பட்டவையே. சிற்சில அணுக்கள், சிற்சில வகைகளில் ஒன்றாய்க் கூட்டு சேர்ந்திருப்பதினால் தான் பொருள்கள்யாவும் வெவ்வேறாகத் தோன்றி செயல்படுகின்றன. ஒரு ஆக்ஸிஜன் அணுவோ அல்லது ஒரு ஹைட்ரஜன் அல்லது நைட்ரஜன் அணுவோ ஒரு நாள் ஆதவனிலிருந்தும் பின்னர் விண்ணில் இருந்தும் வந்து, பிறகு மண்ணிலும், பின்னர் நீரிலும் இருந்து, பின்னர் மறுபடியும்

Koviloor Digital Library

சூரியனிடமோ அல்லது விண்ணுக்கோ சென்றுவிடும் சாத்தியக்கூறு நிறையவே உள்ளது.

ஆயிரக்கணக்கான செல்கள் தினம் தினம் நமது உடலில் கூட அழிந்து கொண்டு தான் உள்ளன. அதே நேரம் புதிய செல்கள் உருவாக்கப்பட்டுக் கொண்டும் உள்ளன. இதன் உண்மை என்னவென்றால் அணுக்கள் இடம் மாறிக் கொண்டே உள்ளன என்பது தான்.

பருவுடல், திட, திரவ, வாயுப் பொருள்களால் ஆனது. சூக்கும உடலோ நுண்ணிய பிளாஸ்மா நிலையிலுள்ள அணுக்களால் ஆகியுள்ளது. ஒரு காலத்தில் சூக்குமம் அழியும். பின்னர் காரண, கஞ்சுக, குணசரீரம் என்று ஒவ்வொன்றாக மறையும். அவை எல்லாம் மிக நுண்ணிய அணுக்களால் ஆனவையே. அவை தத்தம் அளவில் ஒரு சமயம் பிரிந்து மறைந்துவிடும். இவ்வாறு அணுக்களைச் சேர்ப்பதும், ஒரு கால எல்லைவரை காப்பதும், பின்னர் அவற்றைப் பிரிப்பதும் நமது செயல் அல்ல. அவற்றைச் செய்து கொண்டு இருப்பது யார்? எதற்காகச் செய்யப்படுகிறது? எப்படி செய்யப்படுகிறது? இவ்வினாக்களுக்கு படைப்பியல் உண்மையானப் பதில்களைச் சொல்லுகிறது. ஆனால் பரிணாமவியல் என்ன பதிலைச் சொல்லப்போகிறது? சிந்தியுங்கள்.

சிந்திக்கச் சில அறிவியல் உண்மைகள்

சொல்லி வைத்தாற்போல, எழுதிவைத்தாற்போல எல்லாக்காரியங்களும் நடைபெறுகின்ற நிலையில், நம் கையில் ஒன்றுமில்லை என்ற ஒலிதான் நமது இதயமெங்கும் எதிரொலிக்கின்றது. காரியத்திற்கு ஒரு காரணமும், காரணத்திற்கு (அதனைச் செயற்படுத்த) ஒரு கர்த்தாவும் உள்ள உண்மைநிலையை உணர்ந்தவர் மட்டுமே உணர்வர். ஏனையோர் உணரார்; ஏதேதோ எண்ணி ஏடாகூடமாகப் பேசுவர். உணர்வோர் உணர்வை மேலும் உறுதிப்படுத்தத்தான் அருளாளர்கள் அனைத்து உண்மைகளையும் அனுபவித்து உணர்த்தினர். எது, எங்கெங்கு, எப்பொழுது, எப்படி எப்படி, யார் யாரால் எதற்காக, நடைபெறவேண்டு என்பதனை முற்றிலும் உணர்ந்த ஒருவன்தான் அதனை ஆங்காங்கு, அவ்வப்பொழுது, திட்டப்படி, தேர்ந்தெடுத்தோரால், காரண அடிப்படையில் காரியம் நிகழ்த்துகிறான். மனசாட்சி உடையோரால் இதனை மறுக்க முடியாது.

Koviloor Digital Library

இன்னவினை இன்ன தலத்து இன்னபொழுது இன்னபடி
இன்னதனால் எய்தும் என அறிந்தே அன்னதலத்து
அன்னவினை அன்னபொழுது அன்னபடி
அன்னதனால் பின்னமறக் கூட்டும் பிரான்

என்று சிவபோகசாரம் பேசுகின்றது.

இரண்டாம் உலகப் போரில் வெற்றிகண்ட வின்ஸ்டன் சர்ச்சிலின் தேர்தல் தோல்வியின் பொருளென்ன? பிற்காலச் சோழப் பேரரசின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் என்னதான் காரணம் சொன்னாலும் அது ஏற்பட வேண்டிய காரணமும் அதன் அவசியமும் யாருக்குப் புரியும்.

அன்னிய அரேபியப் படையெடுப்பினை, அதன் ஆதிக்கத்தினை அடித்து நொறுக்கிய ஆங்கிலப் படையெடுப்பின் அவசியம் என்ன? அகிம்சாவழியில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிடியினைத் தளர்த்தி விடுதலைப் பெற்றுத்தந்த காந்தி பிறந்ததின் நோக்கம் என்ன?

மகாத்மா காந்தியின் மரணம் நியாயமா? அக்கொலை கூறும் நிலை என்ன? இன்றைய அமெரிக்காவில், உண்மை பூர்வகுடிமக்களாக, மண்ணின் மைந்தர்களாக வாழ்ந்த செவ்விந்தியர்கள் செய்த பாவமென்ன? இந்தியாவைக் காணவேண்டுமென்று புறப்பட்ட கொலம்பஸ், செவ்விந்தியர்கள் வாழ்ந்த இடத்தைச் சென்றடைந்தது ஏன்? அன்றுமுதல் அலையலையாகச் சென்று நுழைந்து ஐரோப்பியர்கள் கொலை கொலையாய் அப்பழங்குடி மக்களைக் கொன்று குவித்தக் கொடுமை ஏன்?

சிந்து நதிவரை வந்த செங்கிஸ்கான் சிந்தை, பெர்ஷியாவை நோக்கியதும் அங்கு அவன் ரத்தவெறி ஆடியதும் எதற்காக? முகம்மது கஜினியின் சோமநாதபுரம் கோயில்கொள்ளையும் அதனை எதிர்த்த 50,000 மக்களைக் கொன்று குவித்தக் கொடுமையையும் அறியாதவனா பிருத்விராஜ்!? அதன் பின்னர் ஒரு லட்சம் அடிமைகளை (பஞ்சாபில் சிறைப்படுத்தப்பட்ட பஞ்சாபியர்களையும்) கொன்று குவித்த கொடுமையைத் தெரியாதவனா பிருதிவிராஜ்? பின் ஏன் 1191-ஆண்டில் டெல்லி அருகே நடைபெற்ற போரில் தோற்றுப் போன முகம்மது கோரியைக் கொல்லாமல் விட்டான் (பெருந்தன்மையுடன்) பிருத்தீவிராஜ்? அவ்விரக்கத்திற்காக அம்மன்னன் பெற்றப் பரிசு, 1192-இல் நிராயுதபாணியாக அவன்தலை அதே கோரியால் ஈவிரக்கமின்றித் துண்டிக்கப்பட்டதுதான். இந்த இரண்டாம் போரில் மருமகன் பிருத்தீவிராஜீக்கு மாமனார் கன்னோசி மன்னன் (சம்யுக்தையின் தந்தை)

Koviloor Digital Library

ஏன் தோள் கொடுக்கவில்லை? ஐந்துலட்சம் பேர்களைக் கொன்று குவித்து டில்லியைத் தீ வைத்து கொளுத்தி வெறியாட்டம் ஆடிய தைமூரின் அவதார மகிமையின் காரணம் என்ன என்று யாருக்கும் விளங்கவில்லை? தமிழ்நாட்டுச் சோழமன்னன் சிந்து நதிப்பக்கம் செல்ல எண்ணாதது ஏன்? கஜினி கங்கை நதிப்பக்கம் பார்க்க மறுத்தது ஏன்? இந்த இருவரும் ஒருவருக்கொருவர் எதிர்கொண்டிருந்தால் வரலாறு எப்படி மாறி இருக்கும்?

அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்
அவர் அவர் வினைவழி அவரவர் அனுபவம்
எவர் எவர்க் குதவினர் எவர்எவர்க்குதவிலர்
தவரவர் நினைவது தமையுணர் வதுவே.

என்ற சிவபோக சாரம் தான் ஓர் ஆறுதலான பதிலைத் தருகின்றது.

எதிர்பாராதவை

இங்கிலாந்து இளவரவர் சார்லஸையும், அழகி டயானாவையும் சேர்த்து வைத்தது யார்? அவர்கள் இருவரையும் பிரித்துவைத்ததும், அதில் பின்னவரை மறைத்து விட்டதும் யார்? இவ்வாறு நடந்தது ஏன்? ஏன்? அந்த அரச குடும்பத்துத் தம்பதியினருக்கு என்ன குறை? அழகில்லையா? அறிவில்லையா? பணமில்லையா? புகழ் இல்லையா? சமூக அந்தஸ்தும் ஆதரவும் இல்லையா? என்ன குறை அவர்களுக்கு? பிறகு ஏன் இந்த அவலமும் அசிங்கமும் அவர்கள் வாழ்வில்? நன்றாக வாழ்ந்திருத்திருக்கலாம். ஏன் அவர்கள் வாழ்வு இப்படி நாசமாகப் போனது என்று நாம் நினைக்கலாம். ஆனால் அவர்கள் அது பற்றிச் சிறிது கூடச் சிந்திக்கவில்லை. ஏன் அவர்கள் சிந்திக்கவில்லை? அப்படியே சிந்தித்திருந்தாலும் அச்சிந்தனையையும் மீறி அவர்களை வேறு வழியில் செயல்பட வைத்தது எது? ஏன்? எதற்கு?.

பிரான்ஸின் மன்னன் மாவீரன் நெப்போலியன் ரஷ்யப் படையெடுப்பில் மட்டும் ஏன் அப்படியொரு அடிமுட்டாள்தனமான முடிவிற்கு வந்தான்? அந்த முடிவிற்கு வரச் செய்தது எது? ஏன்?

நெப்போலியன் தந்தை யார் என்பதனைப்பற்றி இன்று வரை வரலாற்று அறிஞர்கள் தெளிந்த ஒரு முடிவிற்கு வர இயலவில்லை. அவன் காலத்தில் கூட அப்படிப்பட்ட பேச்சுக்களைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல், அத்தனையையும் அலட்சியப்படுத்தி வாழ்ந்த போனபார்ட், தன்னுடைய இறுதிக்காலத்தில் ஜோசபின் என்ற தனது

Koviloor Digital Library

காதற்கிழத்தியின் நினைவால் வாடி, அவள் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டே உயிர்விட்டானே! அந்தநிலையைப் பற்றி என்ன சொல்ல?

உலகத்திலேயே தனது இனம்தான் மிகவும் உயர்ந்த இனம் என்றும், ஒழிக்கப்பட வேண்டிய முதல் இனம் யூத இனம் என்றும் கொக்கரித்துக் குதியாட்டம் போட்டானே அடால்ப் ஹிட்லர். அவனை ஆட்டி வைத்தது எது? யார்? ஏன்? அவன் ஆட்டத்தின் இறுதியில் அவனை அடக்கி அடங்கவைத்து அவனது உடல் இருக்கும் முகவரி கூடக் கிடைக்காமல் செய்தது எது? ஏன்? லட்சக்கணக்கில் மக்களை அழித்த அவன் இறுதியில் தன்னையேத்தடயமின்றி அழித்துக் கொள்ளக்கூடியத் அளவிற்குச் சென்றது ஏன்?

ஆசை நாயகன் ஆண்டனி இருக்கின்றான், என்ன கவலை இனி என்று எண்ணி இறுமாந்திருந்தாளே! எகிப்தின் பேரழகி கிளியோபாட்ரா! அவள்நிலை என்ன? சீசரிடம் ஆண்டனி தோற்றது ஏன்? எப்படி? தனது வீரனிடம் கத்தியைக் கையில் பிடித்துக் கொள்ள சொல்லி, அவனைக் கட்டிப் பிடித்து அவன் வயிற்றில் புகுந்து முதுகுவழி வெளியில் அக்கத்தி வர உயிர் விட்டானே மாவீரன் ஆண்டனி! அச்செய்தி கேள்வியுற்றதும் கிளியோபாட்ரா வைப்பர் என்ற விஷப்பாம்புகளை கூடையில் கொண்டுவரச் சொல்லி தனது மார்பகத்தில் கொட்டி, கடிக்க வைத்து உடல் நீலம், பூக்க ,வாயில் நுரைத்தள்ளி உயிர் இழந்தாளே! இவளுக்கு அவனைக் காட்டி அவனுக்கு இவளைக்காட்டி இருவரையும் மறைத்த அந்த ஒன்று எது? அது ஏன் அவ்வாறு செய்தது?

மழை பொழிவதற்கும், வெய்யில் அடிப்பதற்கும் ஒரு மகத்தான காரணம் இருக்கும் பொழுது, எனது பிறப்பிற்கும், எனது தாத்தாவின் இறப்பிற்கும் காரணம் இல்லை என்று எந்த முட்டாளும் சொல்ல முடியாது.

முசோலினியைப் போன்றதொரு மகன் தனக்கு வேண்டும் என்ற ஆசையில், படுக்கை அறையில் அவன் படத்தை வைத்து பார்த்துக் கொண்டே கணவனுடன் கூடிக்குலாவிய ரோமாபுரிப் பத்தினிப் பெண்கள்! எல்லோரும், ஒரு கட்டத்தில் அந்தப் படங்களை எல்லாம் ரோம் நகரின் நடுப்பகுதியில் போட்டு உடைத்து அவன் முகத்தின் மீது சிறுநீரைப் பெய்து இழிவுப்படுத்தினார்களே! அந்த வரலாற்று ஏடு சொல்லும் நீதி என்ன?

அப்போலோ பதினொன்றை அமர்க்களமாக நிலவில் இறக்கிய அதே விண்வெளி விஞ்ஞானிகள் தான். அப்போலோ பதின்மூன்றினை ஆபத்தில்லாமல் தரை இறக்க அந்தப் பாடுபட்டார்கள். அறிவியல் காரணம் ஆயிரம் சொன்னாலும் எதனைத் தடுக்க இவர்களால் இயன்றது?; எதனைத் தவிர்க்க இவர்களால் முடிந்தது? சொல்லுங்கள்

Koviloor Digital Library

பார்ப்போம், பேரழகிகளுக்கும் பெருவியாதி (தொழு நோய்) வந்த வரலாறு உண்டு.

கர்ஜித்துக் காட்டிலே ஆட்டம் போட்ட சிங்கத்தையும் இறுதியில் கழுகுகள் தான் கொத்தித் தின்கின்றன.

மணிமுடி தரித்தாலும் மாமன்னனின் உடலைக்கூட மண்ணில் புதைத்த பின்னர் புழுக்கள்தான் உண்டன. இன்றைய மாபெரும் தலைவர்களுக்கு வரப்போவதும் அதே கதி தான்! யானையின் காலடியில் நசுங்கும் அதே உயிரினங்கள்தான் யானையின் இறுதிச் சடங்குகளைச் செய்கின்றன.

ஒருவருக்கு நலத்தையும் வளத்தையும் அளிக்கின்ற பெருமழைதான், வேறொருவருக்கு பெரும் அழிவினையும், பேரிழப்பினையும் தந்தருள்கின்றது. உப்பு விற்கச் சென்றவனுக்குப் பெருமழை பெய்து நஷ்டம் மேற்பட்டதால், தொழிலை மாற்றி மாவு விற்கச் செல்கின்றான். பெருங்காற்று வீசி நஷ்டம் விளைவித்தது. ஏர் உழச் சென்றல் எருது காலைத் தூக்குகின்றது. என்ன செய்வான் அவன்?

'ஊழிற் பெருவலி யாவுள?'

'ஊழ்வினை உறுத்துவந் தூட்டும்'

'ஊழின் மிக்கது ஊழ் அலதில்லையே'

என்பன மறைமொழிகள் அன்றோ?

மலர்வதும், உதிர்வதும், காய்ப்பதும், கனிவதும், விதை விழுவதும், முளைத்து வளர்வதும் காரணமின்றித்தான் என்று எவனாவது சொன்னால் அவன் அறியாமை நிறைந்தவராகத்தான் இருக்கவேண்டும்; அல்லது கயமையும் கபடமும் நிறைந்த சமூகத்தின் கரும்புள்ளியாகத் தான் இருக்க வேண்டும். சூரியோதயக்காரியம் உலகிற்கு வெளிச்சத்தையும், வெப்பத்தையும் அளிக்கும் பொருட்டுத்தான்.

சந்திரோதயம் உயிர்க்ட்கு இரவில் ஒரு அமைதியையும் அழகையும், அளவுடைய ஒளியையும், மக்கள் காலக்கணக்கினை அறிந்து கொள்ளவும் தான்.

கேள்விக்குறியாய்க் குப்பைத்தொட்டியில் கிடந்த குழந்தை, குபேரனாய், கோடீஸ்வரனாய், தலைவனாய், தளபதியாய், அமைச்சனாய், ஆள்பவனாய், ஆச்சர்யக்குறியாய் மாறிய வரலாற்றினை நாம் அறிவோம். அதற்குக்காரணம் என்ன? அது எப்படி, எவ்வாறு என்றெல்லாம் எத்தனையோ முறை யோசித்திருக்கிறேன். பலரிடம் பதில் என்னவென்று பலகாலும் கேட்டிருக்கிறேன்.

Koviloor Digital Library

பத்துத் தலைமுறைகள் பாடுபட்டுப் பொருளை ஈட்டிக்காத்து, சோம்பி இருந்து குந்தித் தின்றாலே கவலையின்றி வாழ்ந்துவிடலாம் ஏழுதலைமுறைகள் என்ற வளமையில் வியப்புக்குறியாய்ப் பிறந்து வளர்ந்தப் பிள்ளை வீதியின் ஓரத்திலே வினாக்குறியாய் விழுந்து கிடக்கின்ற அவலதன்னைக் கண்ணால்கண்டு அதற்கும் காரணத்தைத் தேடியவன் யான். வியப்புக்குறி வினாக்குறியாவதும், வினாக்குறி வியப்புக்குறியாவதும், முற்றுப்புள்ளி கமாவாக ஆக்கப்படுவதும் காலத்தின் கட்டாயம் என்றால் அக்காலத்தைக் கட்டாயப்படுத்திய அளப்பரும் ஆற்றலுள்ள அரும்பெரும் அறத்தலைவன் யார்? அவன் கொள்கையும், குறிக்கோளும், கோட்பாடுகளுந்தான் என்ன? அதுதான் வாழ்வின் ரகசியம் என்றால் அந்த ரகசியத்தைக் காத்து அளித்த கால தேவன் யார்? என்று எண்ணி எண்ணி வியந்தவன் யான்!

கோடானு கோடி ஆண் விந்தணுக்கள் சேற்றாற்றில் நீந்துவது போல் கருப்பையினுள் நுழைந்து பெலோப்பியன் டியூபில் நான் நீ என்று போட்டிப்போட்டுக் கொண்டு பெண்கருமுட்டையைத் தேடி மோட்சம் பெற அலைந்து முட்டையின் திருவோட்டுக்கதவினைத் தட்டித் தட்டி தாள்திறவாய்! திருக்கதவம் தான் திறவாய்! மணிக்கதவம் தான் திறவாய் என்று தலையால் முட்டி முட்டி வரிசையாக வீழுகின்ற நிலையில், அத்தனையையும் அனுமதிக்காமல், ஏதோ ஒன்றினை மட்டும் ஏற்றுக்கொள்ள மனம் கொண்டு, தீர்மானித்து, வாயிலைத்திறந்து, நுழைந்த தலையை மட்டும் உட்கொண்டு வாலினை வெட்டி விட்டு, ஆட்கொண்ட ஒரு நிலையில்தான் நீங்களும் நானும் கருவாகி உருவாகி, வெளியாகி இன்று இங்கு இப்படி ஆட்டம் போட்டுக்கொண்டு இருக்கின்றோம்! இது விபத்தா? விளையாட்டா? வேடிக்கையா? விபரீதமா? திட்டமிட்டு நடந்ததா? திடீரென நடந்ததா? வெட்டித்தனமா? வினைப்பயனா? வேதனையா? நமது விருப்பம் இதில் எங்குள்ளது? நமது வேதனையை யார் கேட்பது? நமக்கு வந்த சோதனையை யார் நடத்தியது?

நான் எதற்காகப் பிறந்தேன் என்றக் கேள்விக்கே விடை தெளிவில்லாத நிலையில உள்ளவர்களாலா, நான் ஏன் இங்கு பிறந்தேன்? என்னை ஏன் நீ இங்கு பெற்றாய்? என்ற வினாவிற்கா தெளிவான பதிலைப் பெற்றுவிடமுடியும்? என்னை ஏன் நீ பெற்றாய் என்று கேள்வி கேட்பதைவிட, நான் ஏன் பிறந்தேன் என்று தனக்குத்தானே கேட்டால் ஒரு சமயம் ஞானம் பிறக்க ஒரு வழிபிறக்கலாம்! கடலிலே உப்பு நீர் உள்ளது காரியம் என்றால்,

Koviloor Digital Library

அதற்குக்காரணம் உயிர்கள் வாழ, பூமி எங்கும் மழை பொழிய வேண்டியே ஆகும். ஆறெல்லாம் நீர் ஓடும் காரியத்திற்குக் காரணம் தரையெங்கும் பயிர்களும், உயிர்களும் தாகம் தீர்த்து வளர்ந்து செழித்து வாழத்தான். உயிர்களாகிய நாம் பலன் பெறுகின்ற நிலைக்குக் காரணம் பருவமாற்றம் என்கின்ற காரியத்தின் விளைவு தான்.

செய்யாத தவமில்லை: ஈயாத பொருளில்லை; கொடாததானமில்லை; தராத தருமமில்லை; எத்தனை வேள்வி!; எத்தனை நோன்பு! எத்தனை விரதம்! எத்தனை சாந்தி! எண்ணற்ற பரிகாரங்கள்! எண்ணிலடங்கா பரிசோதனைகள்! எத்தனை எத்தனை மருந்து! இருபது ஆண்டுகள் இடைவிடா யாத்திரை! கோயில், குளம், மூர்த்தம், தீர்த்தம் என்று சென்று மூச்சிற்கு முன்னூறு முறை வேண்டியும் இவர்கள் பெறவில்லை புத்திரப்பேறு! எல்லாம் சரி (நார்மல்) என்கிறார் மருத்துவர். ஏன் இந்த அவலம்? (டெஸ்ட் டியூப், குளோனிங் சமாச்சாரங்கள் எல்லாம் தனி; இங்கு இவை வேண்டாம். பின்னர் அதனைத் தனிக்கட்டுரைகளில் காண்போம்).

சூழ்நிலையின் கட்டாயத்தால், சபலத்தால், சந்தர்ப்பரவசத்தால், சற்று நேர விளையாட்டால், சிறிய சுகத்தால் அதற்கு ஆசைப்பட்டதால், பலவீனத்தால், பலவந்தத்தால், அறியாமையால், தெரியாமையால், புரியாமையால் நடந்ததொரு சிறு சேர்க்கையால் ஏற்பட்ட விபரீத பலன் வயிற்றில் ஒரு ஜீவன்! சம்பந்தப்பட்ட இவர்களுக்கு வாழ்வே சோதனை; ஏன் இவர்களுக்கு இந்த நரக வேதனை?! கருத்தடைகளை மீறி உருவான எத்தனையோ கருக்களின் கதைகள் இங்குண்டு ஏராளம்! ஏன் இந்த முரண்பாடு!? எண்ணிப்பார்க்கையில் சிவபோக சாரத்தின் கீழ்க்கண்ட பாடல்தான் என் நினைவிற்கு வருகிறது.

கூட்டுவதும் கூட்டிப் பிரிப்பதும் ஒன்றொன்றை
ஆட்டுவதும் ஆட்டி அடக்குவதும் - காட்டுவதும்
காட்டி மறைப்பதுவும் கண்ணுதலோன் முன் அமைத்த
ஏட்டின்படி என்று இரு.

படைப்பின் அடையாளங்கள்

இன்றைக்கு வாழும் 600 கோடி மாந்தருக்கும் தனித்தனி அடையாளம் உண்டு. குறைந்தபட்சம் ஆறுவித்தியாசம் உண்டு.அதனல் தான் நாம் ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டு கொள்கிறோம். மாட்டு மந்தையில் தனது எருமையையும், ஆட்டுமந்தையில் தனது

Koviloor Digital Library

குட்டிஆட்டையும் அடையாளம் கண்டுவிடுவான் அதனைமேய்ப்பவன். நமக்கே சமயத்தில் இது வியப்பாக இருக்கும்! கைகளில் உள்ள ரேகைகள், உதட்டில் உள்ள கோடுகள், தலை(மண்டை)ஓட்டின் இணைப்பில் உள்ள கோடுகள் இவைஎல்லாம் ஒன்றுபோல் ஒன்று எப்பொழுதும் இருப்பதேஇல்லை. இத்தகைய வேறுபட்ட வித்தியாசமான அடையாளங்கள் குற்றவாளிகளைக் கண்டறிய புலனாய்வுதுறைக்கு கைகொடுக்கும் கைளாக அமைந்துள்ளன. இதனை எண்ணி வியக்காமல் யாரும் இருக்கவே முடியாது. தாயின் மணத்தைக் கண்டறியும் சேயின் திறத்தைப் பற்றி என்ன சொல்ல! ஒட்டிப்பிறந்த இரட்டைப்பிள்ளைகளுக்கும் உடலால், மனத்தால், சொல்லால், செயலால், எத்தனை எத்தனையோ வேறுபாடுகள்!

தாயை இழந்து தவிக்கும் குழந்தைக்கு தான் தாயின் உடைகளை உடன் போட்டு அதன்வழி அவளின் உடல் மணத்தைக் காட்டி, மனத்தை ஆற்றுப்படுத்திய அந்நிகழ்வுகளை நினைத்துப் பார்க்கிறேன். பால் மணம் மாறாத குழந்தைக்குத் தாய்மணம் தரும் ஆறுதல் இதுதான் என்பதனை எண்ணிப்பாருங்கள்! படைப்பின் ரகசியத்தினைப் பாங்குறப் புரிந்து கொள்ள இது உதவும்.

பிறப்பு முதல் இறப்பு வரை எறும்புகள் என்றுமே எப்பொழுதுமே உறங்குவதில்லை. இந்த அதிசயத்துடன் இன்னொன்றும் உண்டு; அன்ன ஆகாரம் ஏதுமின்றி அவை நூறுநாட்கள் வரை உயிர்வாழும் தன்மையினைக் கொண்டுள்ளன. மீன்கள் இமைப்பதே இல்லை. மீன் போல் கண்ணிமையாமல் காப்பவன் பாண்டியன் என்பதனாலன்றோ அவன் கொடியில் மீன் பொறிக்கப்பட்டுள்ளது. அன்னை மீனாட்சிக்கு (மீனக் கண்ணி) மீன் போன்ற கண் கொண்டதால் மட்டுமல்ல, மீனைப் போல் கண்ணிமைக்காமல் உலகத்தைக் காத்தருளிக் கொண்டிருப்பதாலும் தான் அப்பெயர். கல்லுக்குள் தேரை! கடலுக்குள் ஆமை! சிப்பிக்குள் முத்து! சிகைக்குள் ஈறும் பேன்களும்! உடலுக்குள் ஓரயிரம் உயிர்கள்! ஒன்றில் ஒன்று வாழ்ந்து ஒன்றில் ஒன்று அழிந்து மீண்டும் ஒன்றில் ஒன்று தோன்றி ......! அப்பப்பா! இந்த அநாதிப் பிரவாகத்தின் காலப்பயணமும், களப்பணிகளும் எந்த ஆதாரத்தில்?.......என்ன நோக்கத்தில்?......எதன்(யாருடைய) கட்டுப்பாட்டில்?....

இப்படி ஆயிரம் ஆயிரம் வினாக்கள் நம்முள்ளே எழுகின்ற போது, காரிய காரண கர்த்தாவை கண்டிப்பாகத் தேடும் நமது நுண்ணறிவு; அப்பொழுது அனுபவம் (பார்த்த அறிவு, பட்டறிவு, கேட்டறிவு)

Koviloor Digital Library

படிப்பு, அறிவியல், தர்க்கம், விஷய ஞானம், அருளாளர்களின் உரை, அவர்கள் ஆற்றிய அற்புதங்கள் இவை எல்லாம் ஏராளமான கருத்துக்களை நம்முன்னே வைக்கும்.

அவற்றின் அடிப்படையிலான உண்மைகளையும், எதார்த்த நிலையையும் மனதில் கொண்டு, ஒன்றோடு ஒன்று தொடர்பு படுத்தி பார்க்கின்ற போது, எதுவும் நம் கையில் இல்லை என்கின்ற உண்மையை நாம் உணரலாம். நமது நல்லெண்ணங்களும், இடைவிடா முயற்சியும், பெரியோர்களின் ஆசியும், அன்பர்களின் ஆதரவும், அரவணைப்பும், குருவருளும், இறையருளும் தான், நம்மை வழி நடத்துகின்றன. என்ற உண்மை புலப்படும். இதன் அடியொற்றில் இன்னும் சென்றால் நாமும், நம் வாழ்வாகிய காரியம், நமது அனுபவ வாயிலாகப் பெறும் பக்குவ ஞானம் என்கின்ற காரணத்திற்காக, கர்த்தர் ஆகிய கடவுள் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார். அவர் தான் படைப்பவர், நாம் எல்லாம் படைக்க படுபவர்கள். அவர் தான் ஆட்டுவிப்பவர். நாம் எல்லாம் ஆடுபவர்களே! சடத்தினின்று உயிர் ஒருகாலும் தோன்றாது? எனவே படைப்புதான் தோற்றத்திற்கு காரணமே தவிர, பரிணாமம் அல்ல என்கின்ற உண்மையை ஓரளவிற்கேனும் உங்களுள் உணர இயலும் என்று நம்புகிறேன்.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
43222

Koviloor Digital Library

அவ்வப்பொழுது மாறுகின்ற அறிவியல் உண்மைகள்!?

மனித சீரணமண்டலத்தில் உள்ள குடல்வால் (Appendix) என்கின்ற ஒரு சிறு உறுப்பு தேவையற்ற ஒன்று என்றும், பரிணாமத்தின் எச்ச கொச்சம் என்றெல்லாம் கூறினார்கள் அறிவியல் மருத்துவர்கள்; கூறியதோடு மட்டுமின்றி யாருக்காகிலும் வயிற்றில் அறுவை சிகிச்சை செய்கின்ற போதெல்லாம் நன்றாக இருக்கின்ற குடல்வாலினைக் கூட வெட்டி எடுத்து வெளியில் எறிந்துவிடும் நிகழ்ச்சி மருத்துவ உலகில் ஒரு சடங்காகவே பின்பற்றப்பட்டது. ஆனால் இன்றோ அவ்வுறுப்பு அனாவசியமான படைப்பல்ல; பரிணாமத்தின் எச்ச சொச்சமும் அல்ல; உணவு செரித்தலுக்கானதொரு முக்கிய பங்காற்றுகிறது அவ்வுறுப்பு; அதனின்று தான் ஒரு வகை நிணநீர் உற்பத்தி செய்யப்பட்டு சீரணத்திற்கு முக்கியமாக உதவுகின்றது என்கின்ற உண்மை இன்று கண்டறியப் பட்டுள்ளது.

தொண்டையில் டான்சிலை அறுவை செய்வதே சரியானது என்று முடிவெடுத்த அன்றைய மருத்துவ அறிவியல் இன்று அது வேண்டாம் என்றும், அப்பகுதியில் உள்ள நிணநீர் சுரப்பியின் அடிப்படை பாதிக்கப்படுகிறது என்றும், அறுவை செய்து அப்பகுதி அகற்றப்படுவதால் வேறு விதமான பக்கவிளைவுகள் ஏற்படுகின்றன என்றும் இன்றைய மருத்துவ அறிவியல் திட்டவட்டமாகக் கூறுகிறது. இன்று அவ்வறுவையை யாரும் செய்வதே இல்லை.

படைக்கப்பட்ட எல்லா உடல் உறுப்புக்களும் அவசியமான காரியங்களுக்காக காரணத்துடன் தான் படைக்கப்பெற்றுள்ளன என்கின்ற யதார்த்த உண்மையினை ஏனோ சில காலத்திற்கு முன்பு வரை அறிவியல் அறியாமல் இருந்தது.

முதன் முதலில் வேதியல் தனிமங்களின் தான் (Chemical Elements) உலகப் பொருள்கள் அனைத்திற்கும் அடிப்படையான கட்டுமானப் பொருளாகக் கொண்டனர் விஞ்ஞானிகள். பின்னர் தனிமங்கள் யாவும் அணுக்களால் ஆனவை என்று கண்டறிந்தனர். பின்னர், உலகப் பொருள்கள் அனைத்திற்கும் அணுக்களே அடிப்படை என்று அறிவியல் விஞ்ஞானிகள் தெளிந்து தெரிவித்துள்ளனர். இப்பொழுது அவ்வணுக்களும் அடிப்படை அல்ல; அணுக்களிலும் மிக நுண்ணிய குவார்க்குகள் Quark லெப்டான்ஸ் Leptons ஆகிய இவையே அனைத்து உலக பொருள்களுக்கும் அடிப்படை என்கின்றார்கள்.

மேலும் ஒரு அதிசயமாக குவார்க்குகளிலும் அதி நுண்ணியவை பல இருக்கலாம் என்கின்றதொரு செய்தியைச் சமீபத்தில் அறிவியல் நாளேடு ஒன்று வெளியிட்டுள்ளது.

Koviloor Digital Library

படைப்பும் பரிணாமமும் என்னும் இந்நூலாசிரியர்
சிவகாமியின் செல்வன் **டாக்டர் தி. பாலசுப்பிரமணியன்** அவர்கள்



மேல்நிலை
பள்ளிக் கல்வித் துறையில்
பல ஆண்டுகள் நிர்வாகத் துறையில்
பணியாற்றிச் சிறந்தவர்

ஆசிரியர் பயிற்சி நிறுவன
முதல்வராயத் தம் ஆற்றலைப்
பல் வகையாலும் புலப்படுத்தி வரும் பெற்றியர்

சைவசித்தாந்தக் கருத்துக்களிலும்
சைவத் திருமுறைகளிலும் அழமான
ஈடுபாடும் தெளிந்த நல்லறிவும் பெற்ற பண்பினர்

அறிவியல் சார்ந்த நெறிகளில்
சமயச் கருத்துக்களை இன்றைய
மக்கள் அனைவரும் எளிதில் உணர்ந்து
கொள்ளும் வகையில் எழுதி வெளிப்படுத்திவரும்
எழுத்து வன்மை மிக்கவர்

ஆங்கிலப் புலமையும்
அறிவியற் திறமும்
ஒருங்கே பெற்ற உயரிய அறிஞர்.

இலக்கியம், சமயம்,
சாத்திரம், அறிவியல்,
பண்பாட்டியல் என்று பல்வேறு
துறைகள் பற்றி எழுதி
வெளியிட்டு வரும் பல்துறைப் பேரறிஞர்

சிந்தாந்த ரத்தினம்
ழ. திருநாவுக்கரசு, B.Sc., M.S (IT)., P.G.D.C.A.,
ஆசிரியர்: "**சிவ சிவ**"
3/49 மேலசாலைத் தெரு,
சுந்தரபெருமாள்கோயில் - 614208